தென்மொழி

சுவடி 29
ஓலை 5

விலை :
உருபா 4-00

கிளர்ச்சி மூளும் !

இளையார்முன் வைக்கின்ற ஏற்றமிகு
    திட்டங்கள் ஏதுமின்றி
விளையாட்டில் வெற்றிகளைக் குவிப்பதுவே
    பெருநாட்டின் முன்னேற்றம் போல்
சளையாது தொடர்கின்ற வீணர்களை
    ஊக்குகின்ற சிறுமையாலே
விளைவேதுந் தருகின்ற முளையொன்றும்
    தோன்றாது வெறுமையாமே!

தாளிகைகள் அன்றாடம் தவறாமல்
    முழுப்பக்கச் செய்தியோடு
வாளிப்பாய் வண்ணமிகு படங்களையும்
    வெளியிட்டுப் பரப்ப மற்று
நாளிலொரு சிறுபொழுதும் நழுவாமல்
    தொலைக்காட்சி ஒளிபரப்ப
மூளிபட்ட தேசியங்கொள் இந்தியா
    விளையாட்டால் முன்னே றுங்கொல்!

உழைப்பாருக் கொருகாசும் உயர்த்துதற்குத்
    தயங்குகின்ற உலுத்தர் கூட்டம்
அழைப்பின்றி வரிசையிலே முன்னின்று
    பரிசள்ளிச் சொரிவ தெல்லாம்
பிழைப்புக்கு வழியறியாப் பெருவாரி
    மக்கள்தமைப் பகடி செய்தே
இழைக்கின்ற கொடுமையென எண்ணுகின்ற
    நாள்வருங்கால் கிளர்ச்சி மூளும்!

– இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. உ0உஎ : விடை 1996 மே

பொங்கும் புரட்சியைக் காண்பீர்!

இன்னும் பொறுத்திடலாமோ? - தமிழ்
ஈழத்தில் நந்தமிழ்த் தாயினம் நாளும்
முன்னும் வெறியர்க ளாலே - அந்த
மூடராம் சிங்களக் காடைய ராலே,
மன்னுங் கொடுமைகள் தாங்கி - நெஞ்சு
மாழ்கி மாழ்கி மடிந்திடுஞ் செய்தி!
துன்னுந் துடுக்கினைச் சாய்க்க - இளந்
தோன்றல்களே! உடன் மூண்டெழு வீரே!

மாண்டு மடிந்திட லானார் - இளம்
மங்கையர் கற்பை இழந்திட லானார்!
நீண்ட நெடுந்துயர்க் காதை - இன்னும்
நின்றிடும் என்ற நிலையில்லை அங்கே!
ஆண்ட தமிழினம் தம்பி! - இன்றைக்
காளப் படுவதில் மீக்கொடும் போக்காம்!
ஈண்டுத் தயங்கிட லாமோ? - தமிழ்
இளைஞர் இளைஞக ளே, எழுவீரே!

சிங்களர்க் கும் தமி ழர்க்கும் - ஒரு
சேர இணைந்திடும் போக்கினி இல்லை!
தங்கும் தமிழறம் எங்கே! - வெறி
தாக்கிடும் சிங்களர் போர்க்குணம் எங்கே!
எங்கும் பொருந்திடல் இல்லை - இனி
எந்தமி ழீழம் அமைதலே நன்றாம்!
பொங்கும் புரட்சியைக் காண்பீர்! - உயிர்
போவதும் வாழ்வதாம் விடுதலைப் போரில்!

- பாவலரேறு

தென்மொழி சுவடி : 17 ஓலை 11
(சூன், சூலை 81)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி — இனம் — நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி : 28) தி.பி.உ0உஎ – விடை (மே–'96) (ஓலை 5)

எடுத்துக்காட்டான ஆட்சியாக இலங்குக!

தமிழ்நாட்டின் ஆட்சியை மீண்டும் தி.மு.கழகம் கைப்பற்றியுள்ளது!

'செயலலிதாவை வீழ்த்துவோம்; பேயாட்சியை ஒழிப்போம்' என்று சூளுரைத்துப் புறப்பட்டவர்கள் சிலரும் இறுதிக் கட்டத்தில் கலைஞரையே முழு எதிரியாகவும் முதல் எதிரியாகவும் கொண்டு செயற்பட்ட நிலையிலும், மிகுந்த அளவில் ஆதரவளித்துத் தி.மு.கழகத்தையே மக்கள் வெற்றி பெறச் செய்துள்ளனர்.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் செயலலிதா தமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பான ஆட்சிக்கலத்தை, ஆணவ ஆட்டம் ஆடித்தீர்த்து நந்தவனத்து ஆண்டியாய்ப் போட்டுடைத்து விட்டார்.

உண்மைத் தமிழ் அறிஞர்களையெல்லாம் புறக்கணித்து உலகத் தமிழ் மாநாடு நடத்தியும், அதனைக் கண்டித்தெழுந்த ஐயா பாவலரேறு உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் மீதெல்லாம் காவலர்களைக் கொண்டு தடியடி நடத்தியும், அவர்களைச்

சிறையிலடைத்துச் சிறுமைப்படுத்தியும், அயல்நாட்டுத் தமிழறிஞர்களை அழைத்து - அவர்களை மாநாட்டினின்றும் வெளியேற்றி அவமானப் படுத்தியும், தமிழ் இன உணர்வாளர்கள் மீதெல்லாம் கொடிய அடக்குமுறையை ஏவியும், பொய் வழக்குகள் போட்டு அலைக்கழித்தும் அட்டூழியங்கள் செய்த செயலலிதாவின் கொடுங்கோல் ஆட்சி தகர்ந்து தரை மட்டமாகி விட்டது!

இந்தத் தேர்தலைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டு மக்களிடையே ஒரு புத்தெழுச்சி தோன்றி அலைவீச்சாய்த் தொடர்ந்து செயலலிதாவின் வெற்றாரவார வெறும்பகட்டு வெங்கோலாட்சியை வீழ்த்தியுள்ளது!

ஆளுங்கட்சியின் பெரும்புள்ளிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி அமைச்சர்கள்கூடத் தொகுதிகளுக்குள் செல்ல முடியாத அளவுக்குப் பொது மக்களின் சீற்றத்துக்கு ஆளாகிச் சிறுமைப் பட்டுள்ளனர். முதலமைச்சரேகூடப் பல இடங்களில் திட்டமிட்டபடி மக்களைச் சந்திக்க இயலவில்லை. ஆமையாகவும் ஊமையாகவும் அடக்கி யொடுக்கப்பட்டுக் கிடந்தவர்களெல்லாங்கூட எழுச்சி கொண்டு மந்திரிகளையே மடக்கி வினா எழுப்பவும், அதிகாரிகளை நோக்கிக் குரலெழுப்பவும் துணிகொள்ளுமளவுக்குச் செயலலிதா மீதான வெறுப்பு உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ஏன், தேசிய நீரோட்டமே திசை மாறும் நிலை உருவாகி விட்டது! மக்களின் இம் மாபெரும் எழுச்சி எந்தக் காலத்திலும், ஆட்சிப் பொறுப்பேற்கும் எத்தகையார்க்கும் ஓர் அரிய பாடம் என்பது உறுதி!

காவிரிச் சிக்கல், தெலுங்கு கங்கைத் திட்டம், உள்ளாட்சித் தேர்தல்கள், தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் என்று, இனி அமையவிருக்கும் புதிய ஆட்சி எதிர் கொள்ளக் கிடப்பன எத்தனையோ உள்ளன.

'இனிவரும் தலைமுறையினர் தமிழ் உணர்வும் அறிவும் பெறுதற்கு வாய்ப்பின்றி நாடெங்கும் நச்சுக்களைகளாய் மண்டிக்கிடக்கும் ஆங்கிலவழி 'நர்சரி'ப் பள்ளிகளைத் திசை திருப்பித் தமிழ்வழிப் பயிலும் மழலையர் பள்ளிகளாக மாற்ற வேண்டும்; ஆராய்ச்சிப் பட்டம் வரை அனைத்துக் கல்வியும் தமிழ்

வழியிலேயே பயிலுதற்கு வழிவகுக்க வேண்டும்; தமிழ்வழிக் கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும்; 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் முழக்கத்தைச் செயலளவில் நடைமுறைப் படுத்தி வெற்றிகாண வேண்டும்' என்றெல்லாம் தமிழறிஞர் பெருமக்கள், உணர்வாளர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்று ஐயாவின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய கலைஞர் அவர்கள்,

"...அன்றைக்கு இருந்த நிலை இன்று மாறியிருக்கிறது. பாவலரேறு போன்றவர்கள் வழங்கிய உழைப்பால், பட்டபாட்டால் தமிழகத்திலே நிலைமை கனிந்திருக்கிறது என்று நான் சொல்வேன். கனிந்திருக்கிற நேரத்தில் பழத்தைப் பறிக்கக் கூடிய இடத்தில் நாம் இல்லை; யாரோ இருக்கிறார்கள்"

என்று குறிப்பிட்டார்.

அன்று அவர் குறிப்பிடத்தில் மக்கள் இன்று அவரை அமர்த்தியிருக்கிறார்கள். கலைஞர் தமது உறுதி மொழியை நிறைவேற்றும் நிலையை எய்தியிருக்கிறார். ஆகவே, வரும் கல்வியாண்டிலேயே தமிழ்வழிக் கல்விக்குக் கால்கோள் செய்வார் என்று நம்புகின்றோம்.

தமிழன் - தமிழர் என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தாலும் அது எவ்விடத்திலும் முறையாகப் பதிவு பெறுவதில்லை. நாட்டினம் என்ற நிலையில் இந்தியன் என்று குறிப்பிடுவது போல் தேசிய இனத்தின் பெயரால் தமிழன் என்று பதிவு செய்தற்கும் ஆவன செய்வது அடிப்படையான ஒன்று என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

மொத்தத்தில், கலைஞரிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள்; வரலாறு காணாத பெரு வெற்றியைத் தி.மு.கழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அரசியல் தெளிவும் பட்டறிவும் செயல்திறமும் வாய்ந்த கலைஞர் அவர்களின் எதிர்கால ஆட்சி செம்மையான ஒரு எடுத்துக் காட்டான ஆட்சியாக இலங்குகவென்று வாழ்த்தி வரவேற்கிறோம்!

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு - குறள் 544

- இறை

சிறைவாழ்வின் முதல்நாள்!

1965 ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தென்மொழியில் எழுதிய இரு ஆசிரியவுரைகளுக்காக ஐயா பாவலரேறு அவர்கள் மீது அற்றைத் தமிழக அரசு வழக்குத் தொடுத்தது. கடலூர் வழக்கு மன்றத்தில் நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப் பெற்று, வேலூர் நடுவண் சிறையில் அடைக்கப் பெற்றிருந்த ஐயா அவர்கள் **'அந்த நூற்றிருபது நாட்கள்'** *என்னுந் தலைப்பிட்டு நாள்தோறும் குறிப்பு எழுதி வந்தார்கள். விரிவாக எழுதப் பெற்ற முதல்நாள் (17.11.65) குறிப்பு மட்டும் ஈண்டுத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளது.*

–ஆசிரியர்

இன்று அறிவன் (புதன்) கிழமை. இன்று என் வாழ்விலேயே ஒரு திருப்பமான நாள். பிறந்ததிலிருந்து இதுவரை பட்டிராத புதிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட நாள். ஏறத்தாழ இரண்டு மாதங்களாக நடந்து வந்த வழக்கில் இன்று தீர்ப்புச் சொல்லப்பட்டது. வழக்கு அரசினரால் போடப்பட்டது. இந்தியெதிர்ப்புப் போராட்டம் நடந்த மார்ச்சு, ஏப்ரல் திங்கள்களில் நாளில் வெளிவந்த தென்மொழியின் ஆசிரியவுரைகள் அரசினரைத் தாக்குவனவாகவும், பொதுமக்களை அரசினர்க்கெதிராகத் தூண்டி விடுவதாகவும் இருப்பதாக என்மேல் அரசினர் போட்ட வழக்கு இது. இரண்டு மாத வெளியீடுகளிலும் உள்ள ஆசிரியவுரைகளைக் குற்றங்காட்டி இரண்டு வழக்குகளை என்மேலும் உறுப்பாசிரியர்களான தங்கப்பா, சாத்தையா, செம்பியன் இவர்கள் மேலும், சிறப்பாசிரியரான தேவநேயப் பாவாணர் மேலும், இரண்டிரண்டு வழக்குகள் போடப்பட்டிருந்தன.

வழக்குகளைப் போட்ட அரசினர் எங்களைப் பற்றிய சரியான செய்திகளைக் கொடுக்காமலிருந்தது எங்கட்கு ஒருவகையில் துணை செய்வதாக இருந்தது. அவற்றில் பாவாணரைப் பொறுப்பாசிரியராகவும் என்னை அச்சிட்டு வெளியிடுபவராகவும் தங்கப்பா, சாத்தையா, செம்பியன் முதலியவர்களை ஆசிரியர்களாகவும் அச்சக உரிமையாளராகவும் காட்டியிருந்தனர்.

உண்மையிலேயே நான்தான் பொறுப்பாசிரியன். ஆசிரியவுரை எழுதுவதும் செய்திகளைத் தொகுத்து முறைப்படுத்துவதும்,

அச்சிடுவதற்கான எல்லா வகை முயற்சிகளையும் செய்பவனும் நானே. தங்கப்பாவும் சாத்தையாவும் செம்பியனும் உறுப்பாசிரியர்களாக இருந்தனர். தென்மொழி முதல் பக்கத்தினடியில் எல்லாப் பெயர் களுடனும் உறுப்பாசிரியர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருப் பினும், உண்மையாக எனக்குப் பல்லாற்றானும் துணையாக இருந்தவர் தங்கப்பாவே.

தங்கப்பா நல்ல அறிவாற்றலும் பாவன்மையும், நுண்ணிய உணர்வும் கொண்டவராதலின் என் உள்ளத்தை அவர் மிகுவாகக் கவர்ந்திருந்தார்.

காலையில் வழக்கு மன்றத்திற்கு என் துணைவி கமலாவும் தங்கப்பா துணைவி தங்கமும் குழந்தைகளுடன் வந்திருந்தனர். மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் வந்திருந்தனர். இவர்களுடன் பெருமாளும், நாமதேவனும் வந்திருந் தனர். காலையில் வீட்டிலிருந்து புறப்படுமுன்பே தங்கப்பாவிடம் நான் ஒருவேளை சிறைக்கனுப்பப்பட்டால் வெளியிலிருந்து கொண்டு எவ்வாறு தென்மொழி வேலைகளையும்பிற வேலைகளையும் கவனித்துவரவேண்டும் என்பதையும் விளக்கமாகக் கூறினேன். அவரை 3,4 மாதத்திற்கும் மருத்துவ விடுப்புப் போட்டுவிட்டுக் கடலூரிலேயே தங்கிவிடுமாறு கூறினேன். அவரும் இசைந்தார்.

நேற்று இரவிலிருந்தே நான் சிறைக்குப் போவதற்கு முன்செய்யவேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்தேன். கணக்கு வழக்குகளையெல்லாம் எப்படி எப்படி எழுதிவரவேண்டும் என்பதைத் தங்கப்பாவுக்கு நன்கு விளக்கினேன். இறுதியாக, அண்மையில் தென்மொழிக்கென வரவழைக்கப்பட்டுக் கிடக்கின்ற அச்சுப் பொறிக்கு எப்படி மூவாயிரம் உருபா கட்டுவதெனத் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். இவை பற்றியெல்லாம் தங்கப்பா ஒருவருக்குத்தான் முழுக்கவலையிருப்பதாகப் புலப்பட்டது. மாணவர்கள் திரட்டிக் கொண்டுள்ள நன்கொடை விரைந்தும் தேவையான அளவினும் கிடைக்காது என்று தெரிந்தது. இருப்பினும் ஏதேனும் ஒரு வகையில் அப்பணத்தைக் கட்டிவிடலாம் என்ற எண்ணம் மட்டும் என் உள்ளத்தில் உறுதியாக நின்றது.

சரியாக 4-30 மணிக்கு எங்கட்குத் தீர்ப்புச் சொல்லப்பட்டது.

பாவாணருக்கும், தென்மொழி நடவடிக்கைகளுக்கும் தொடர்பில்லையென்று பாவாணரை விடுதலை செய்தனர்.

தங்கப்பா, சாத்தையா இருவரையும் மன்னித்து விடுதலை அளித்தனர். எனக்கு ஒவ்வொரு வழக்கிலும் 100 உருபா தண்டமும்,

கட்டத் தவறினால் இரண்டிரண்டு மாதக் கடுங்காவலும் தண்டனையாகத் தரப்பட்டது. என்னை நடுவர் 'பணம் கட்ட முடியுமா' என்றார். நான் 'முடியாது' என்றேன். 'வேண்டுமானால் தவணை தரப்படும்' என்று மீண்டும் வலியுறுத்தினார். நான் 'தண்டம் கட்ட விரும்பவில்லை' என்பதாகச் சொன்னேன். 'அப்படியானால் சிறைக்குப் போங்கள்' என்று கூறி எழுந்து போய்விட்டார்.

தங்கப்பாவும் சாத்தையாவும் மன்னிக்கப் பெற்று விடுவிக்கப் படுகின்றனர் என்ற செய்தியைக் கேட்டதும் தங்கப்பா 'அதெல்லாம் முடியாது. தங்கள் மன்னிப்பை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது' என்று நடுவரிடம் கூறினார். நடுவர் 'ஒப்புக்கொள்ளா விட்டால் போங்கள்' என்று கூறிச் சிறிது கடுமையான குரலில் பேசினார். அவர் அப்படிக் கடுமையாகப் பேசியதற்கும் காரணம் இருந்தது.

நடுவர் இயல்பாக நல்லவராகப்பட்டார். அவர் எங்கள் வழக்கை இரக்கவுள்ளத்துடன்தான் கவனித்தார். அவர் தம் விருப்பப்படி வழக்கைத் தள்ளுபடி செய்வதாக விரும்பினாலும் அவர் அரசினரின் பார்வைக்காக அஞ்ச வேண்டியதிருந்தது. ஏனெனில் வழக்கு அரசினரின் நேரடி விருப்பத்தினால் போடப்பட்டது. இந்நிலையில் நடுவர் நமக்குப் பரிவாகத் தண்டனையின் கடுமையை ஒரு சிறிது தளர்த்தியிருந்தது இவ்வழக்கு வேறொரு நெறிமன்றத்திலே நடத்தப்பெற்று முடிவு வழங்கப் பெற்றிருந்தால் தெரிந்திருக்கும். இப்படிப் பரிவாக எண்ணி மன்னித்து விடுவித்ததை அவர் மறுத்துப் பேசுகின்றாரே என்ற வருத்தமும் சினமும் தோன்றவே நடுவர் தங்கப்பாவிடம் கடுமையாகக் கூறினார்.

ஆனால், தங்கப்பா கூறியதிலும் பொருள் இருந்தது. அவர் என்னைத் தண்டித்துவிட்டனரே என்ற சினத்தில் பேசியிருப்பார் என்றே எண்ணுகின்றேன்.

ஏறத்தாழ ஓர் இருபது நாள்களுக்கு முன்பே ஒரு நாள் விடியல் 4-30 மணியளவில் ஒரு கனவு கண்டு விழித்து அக்கால் உடனிருந்த மனைவியிடமும், பெருமாளிடமும் கூறினேன். அக்கனவில் தங்கப்பாவையும் சாத்தையாவையும் மன்னித்து விட்டுவிடுவதாகவும், எனக்கு மட்டும் இரண்டு மாதங்கள் கடுங்காவல் தண்டனை கொடுப்பதாகவும் கண்டிருந்தேன். இரண்டு மாதங்கள் என்பது ஒவ்வொரு வழக்கிலுமா அல்லது இரண்டு வழக்கிலும் சேர்த்தா என்பது பற்றி எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இப்பொழுது இதுபோலவே நடந்தது.

தீர்ப்புக் கூறப்படும்பொழுது, நாங்கள்அமர்த்தியிருந்த வழக் கறிஞர் வரவில்லை. ஆனால் என்னுடன் கல்லூரியில் பயின்ற வழக்

கறிஞர் திரு. இராதாகிருட்டிணன் என்பவர் அங்கிருந்தார். அவர், நான் கல்லூரி இடைநிலைவகுப்பில் இறுதியாண்டு படிக்கையில் அவர் இளங்கலை வகுப்பில் முதலாண்டு பயின்றுகொண்டிருந்ததாக நினைவு. அவர் நான் கடலூர் வழக்கு மன்றத்தில் உள்ள அஞ்ச லகத்தில் அஞ்சல் துறைத் தலைவனாகப் புணியாற்றிய மூன்றாண்டுக் காலத்திலும் என்னுடன் நன்கு பழகியிருந்தார். அவர் இந்த வழக்கில் சொல்லப்பெற்ற தீர்ப்பைக் கண்டு வருந்தினார். என்னைத் தண்டம் உருபா இருநூறும் கட்டிவிடுமாறு பலவாறு வற்புறுத்தினார். இப்படி நாமே வலிந்து சிறைக்குப் போய் நாட்டுககோ, மொழிக்கோ, குறிப்பாகத் தமிழர்க்கோ உழைப்பதால் இத்தமிழகத்தில் பயனில்லை யென்றும், மேனாடுகளில் இப்படிச் செய்தால் அவர்கள் பெருமைப் படுத்துவார்கள் என்றும், எனவே நாம் நம் வாழ்க்கையையும் ஒருவாறு பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார். நான் சிறைக்குப் போவது தான் போவது போலவே உள்ளதென்றும் கூறி வருந்தினார்.

அவர் என்மேல் கொண்ட அன்பினால் இவ்வாறு பேசுவதாக எனக்குப் பட்டது. நான் அவரிடம் கீழ்க்காணுமாறு விடை சொன்னேன். "ஐயா நீங்கள் என்மேல் உள்ள அன்பினால் இவ்வாறு குறிப்பிடுகின்றீர்கள் என்று எண்ணிப் பெருமைப்படுகின்றேன். ஆனால் நம் தமிழகம் திருந்துதற்கு இன்னும் பலநூறு தலைமுறைகள் செல்லும் என்று தாங்களே குறிப்பிடுகின்றீர்கள். அப்படிப் பலநூறு தலைமுறைகளுக்குப் பின் திருந்தும் என்று நாம் குறிப்பிடும் இந்நிலையில் நாம் இப்பொழுதிலிருந்தே ஏதாவது செய்ய வேண்டாமா? இப்பொழுதே நாம் விதையை ஊன்றினால்தானே பிறகு அது வளர்ந்து பூத்துக் காய்த்து பயன்தரும். அப் பயனை நாம் இப்பொழுதே அடைய எண்ணினால் முடியுமா? மேலும் நாம் இப்பொழுது சில செயல்களைத் துணிவுடனும் ஈக மனப்பான்மை யுடனும் செய்யவில்லையானால், பிறகு விளைகின்ற விளைவு முழுமையுற்றதாக இருக்குமா? நாம் இன்னமும் கால எல்லையை நீட்டித்துக்கொண்டு போவது நல்லதில்லையே. மேலும் நாம் நான்கு மாதச் சிறைத் தண்டனையை வலிந்து ஏற்றுக் கொள்ளுவது என்பதே பெரிய ஈகமாகவும், போதுமான தொண்டாகவும் ஆகிவிடாதே!

இந்நிலையில் நாம் இந்தச் சிறிய துணிவுடன் இந்தச் சிறிய தண்டனையையும் சிறிது காலத்திற்கு ஏற்றுக்கொள்ளவில்லை யானால் பலநூறு ஆண்டுகளுக்குப்பின் ஏற்படப்போவதாக நாம் நினைத்துக் கொண்டுள்ள தமிழக மலர்ச்சி திடுமென ஏற்பட்டுவிடப் போவதில்லையே. எனவேதான் இந்தத் தீர்ப்புப் பற்றி நான் ஒன்றும் பெரிதாகக் கருதவில்லை. இதுபற்றி உங்கள் அன்பான வேண்டு கோளைப் புறக்கணிப்பதற்காக என்னை மன்னித்து விடவேண்டும்.

மேலும் மேனாடுகள் போல நம்மை இங்குப் பாராட்டமாட்டார்கள் என்று கூறினீர்கள். அப்படிப் பாராட்டுவார்கள் என்று தெரிந்து நாம் ஒரு வினையைச் செய்வதில் என்ன பெருமை இருக்கின்றது?

உண்மையாக நாம் பெருமையோ சிறப்போ பெற விரும்பினால் எல்லாரும் நம்மைப் பாராமுகமாகப் புறக்கணிப்புச் செய்யும் பொழுது பிற்கால மக்களுக்கும் நாட்டிற்கும் நன்மை பயக்குமென்று கருதும் செயல்களை நாம் துணிவுடன் செய்வதில்தானே அவற்றை நாம் உண்மையாகப் பெறமுடியும். எனவே என்னைத் தடுக்க வேண்டா" என்று அவரிடம் ஒரு சிறிய சொற்பொழிவே செய்தேன்.

இக்கருத்தைக் கேட்டபின் வழக்கறிஞர் இராதாகிருட்டிணன் அவர்கள் என்னைப் பற்றி பெருமைப்படுவதாகக் கூறினார். என் துணிவைப் பாராட்டினார். ஆனால் இச்செயலைத் துணிவு என்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஏனெனில் இதுவும் பொதுத் தொண்டில் ஒருவகையே.

நம் நாட்டில் பொதுநல உணர்வு மிக மிகக் குறைவு. மிகவும் எளிமையான கீழ்நிலைக் குடிமகன் முதல், அக் கீழ்நிலைக் குடிமகனை ஒவ்வொரு நொடியும் அவனறியாமல் நினைந்து வருந்திக்கொண்டும் அரசியல், பொருளியல், குமுகாயவியல் முதலிய நிலைகளில் அவனை மேனிலைக்குக் கொணர அயராது பாடுபட்டும் வருகின்ற உயர்ந்த மக்கள் சீர்திருத்தத் தொண்டர், அரசியல் தலைவர்கள் வரை பொதுமை உணர்வில் குன்றியவர்களாகவே உள்ளனர். தனிமை அற்ற நிலையில்தான் பொதுமை உணர்வு பிறக்கும் என்பதை ஒருவரும் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவதில்லை. தன்னலத்தைப் பற்றி மிகுதியும் ஏன் துளியும் கவலைப்படாத ஒருவனே பொதுநலத்தை முற்றும் பேணித் தொண்டாற்ற முடியும். குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ளார் எல்லாரும் தந்நலம் என்ற நிலையை ஒருநொடியும் ஒரு நிலையிலும் ஓரிடத்திலும் மறவாமலேயே பொதுப்பணியாற்ற முன்வருகின்றனர். அவர்கள் தந்நலம் கெடாத பொதுப்பணி ஆற்றவே விரும்புகின்றனர். இதற்கு ஓர் உவமை சொல்லலாம்.

நீந்தத் தெரிந்த ஒருவன், ஓர் ஆற்றங்கரையில் நிற்கின்றான். அவன் நல்ல வெள்ளைச் சட்டையும், பொன் நகைகளும், அணிந்தும் தலையை நல்ல மணங்கமழும் நெய்யினால் மழுக்க வாரியும், காலுறைகள் அணிந்தும் இவ்வாற்றில் எவரேனும் தப்பித்தவறி விழுந்து துயர்ப்படுவார்களானால் தான் அப்படிப்பட்டவரை உடனே கரையேற்றிவிட அணியமாயிருப்பதாகப் பறைசாற்றியவாறும் உள்ளான். அந்நிலையில் ஆற்றின் எதிரே வந்துகொண்டிருந்த ஒரு படகு ஆழ்ந்து அவ்வாற்றில் உள்ள குடிமக்கள் ஆற்றுநீரில் விழுந்து

தடுமாறிக் கொண்டுள்ளனர். அக்கால் கரையில் உள்ள நீச்சுத் தொண்டன் 'மக்களே! நீந்தத்தெரியாத பேதை மக்களே! நான் நின்றுகொண்டிருக்கின்ற கரையின் பக்கமாக எப்படியாவது வந்துசேருங்கள். உங்கள் கைகளையாவது தலைமயிரையாவது பிடித்திழுத்து நான் கரையேற்றி விடுகின்றேன்' என்று கத்துகின்றான். இவன் நீரில் குதித்தால் இவன் உடைகள் நனையும்; அழுக்காகும்; பொன்நகைகள் நழுவி நீரில் விழுந்தாலும் விழும், தலையில் பூசப்பட்டுள்ள மணங்கலந்த நெய் நீரில் கலந்து தலை மயிர் பறந்து விரிந்து காற்றில் அலைபாயும். இத்தொல்லைகளெல்லாம் நேராமல் அவன் அவர்களைக் கரையேற்ற விரும்புகின்றான் என்று வைத்துக் கொள்வோம்.

அந்த நீச்சுக்காரனைப் போலத்தான் நம் நாட்டின் பொதுத் தொண்டர்கள் உள்ளனர். தங்களுக்கிருக்கும் எளிய ஏந்துகளையும் வாய்ப்புகளையும்கூடப் போக்கிக் கொள்ள விருப்பமில்லாதவர்களாக அவர்கள் பொதுத்தொண்டு செய்யப்புறப்பட்டு விடுகின்றார்கள். அவர்களுக்கிருக்கும் வாழ்க்கை நலன்களில் ஒரு சிறிய அளவைக் கூட விட்டுக்கொடுத்துவிட்டுப் பொதுநலம் கருதி உழை என்றாலும் அவர்கள் ஒப்புவதில்லை. ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற அளவே பொதுமக்களுக்காக உழைக்கின்றான். தன்னால் முடிந்த அளவில் உழைப்பதைத் தவறு என்று கூற நான் முன்வரவில்லை. ஆனால் அந்த அளவைத்தான் பொதுத்தொண்டுக்கே இலக்கணம் என்றும் தான் செய்யும் தொண்டுதான் மீறிய அளவு என்றும் வேறெவனும் அதைவிட மீறிச் செய்ய விரும்பான் என்றும், அப்படிச் செய்தால் அவன் ஒரு பித்தனே என்றும், பறைசாற்றிக்கொண்டும் விளம்பரப் படுத்திக்கொண்டும் திரிகின்றானே அதை எண்ணினால் தான் வருத்தமாக உள்ளது.

பொதுப்பணித்துறைகளான, மருத்துவம், பொதுநலம், கல்வி முதலிய துறைகளில் வேலை செய்பவர்கள் ஊதியம் பெறுகின்றனர். சிற்சிலகால் அவ்வூதியம் தாங்கள் வாழ்கின்ற வாழ்க்கைக்கான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளப் போதுமானதாக இல்லை என்று போராடவும் செய்கின்றனர். அவர்களிடம் போய்ப் பொதுத்தொண்டு பற்றிப் பேசிப் பாருங்கள். அவர்கள் செய்யும் பொதுத்தொண்டை விடப் பிற தொண்டே இல்லை என்று அடித்துக் கூறுவார்கள். அவர்கள் செய்வதும் ஒருவகையில் இன்னும் சிறப்பான பொருளில் சொன்னால் பொதுத்தொண்டே. ஆனால் அத்தொண்டுக்கான ஊதியத்தை அவர்கள் வலியுறுத்திப் பெற்றுக்கொள்ளும் பொழுதுதான் அப்பொதுத்தொண்டுக்கான பெருமை குறைகின்றது. ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பால் கொடுப்பதற்காக எவரிடமேனும்

ஊதியம் கேட்டுப் பெறுவாளா? ஆனால் ஒரு செவிலித்தாய் இன்னொரு பிள்ளைக்குத் தன் மார்பில் ஊறும் பாலை ஊட்டுதற்காக ஊதியம் கேட்கலாம். ஆனால் அவள் தாய்க்கிருக்கும் தன்னல மறுத்த உணர்வைப் பெற்றிருக்கமாட்டாள். இக்காலத்து ஊதியம் பெற்றுக் கொண்டு பொதுத்துறையில் ஈடுபடும் ஊழியக்காரர்கள் எல்லாரும் செவிலித்தாயர் போன்றவர்களே.

தென்மொழி தொடக்கத்தில் ஓர் அச்சகத்தில் அச்சாகி வருங்காலைத் தமிழ்த் தொண்டு பற்றி அச்சகத் தொழிலாளரிடையில் ஒரு பேச்சு எழுந்தது. அப்பேச்சில் தென்மொழிக்கு அச்சுக்கோக்கும் ஓரிரு தொழிலாளர்கள் தாங்களும் தென்மொழித் தொண்டர்களே என்று பெருமையாகக் கூறிக்கொண்டனர். ஊதியங் கருதாத தொண்டு செய்ய முன்வருவார் மேனாட்டில் போன்று நம் நாட்டில் இருப்பாரிலர். நம் நாடு அத்தகைய தொண்டர்களையும் தலைவர் களையும் பெறுதற்கு இன்னும் பலநூறு ஆண்டுகள் செல்லுமேனும் நாமாவது சிறிது சிறிதாக அந்நிலைக்கு முன்னோட்டமாக இருக்கும் பாதையில் அடியெடுத்து வைக்கக் கூடாதா?

தீர்ப்பு முடிந்தவுடன் என்னை வழக்குமன்றம் காவலர்களிடம் ஒப்படைக்கக் காவலர்களுக்குத் தொலைபேசிவழிச் சொல்லி அனுப்பப்பட்டது. சிறிது நேரத்திற்குள் காவலர் இருவர் வந்தனர். அந்த இருவரில் ஒரு காவலர் நான் இரண்டாண்டுகட்கு முன் துணையஞ்சல் தலைவராக இருக்கையில் என்னிடம் ஏவலனாக வேலைபார்த்தவர். அக்கால் ஒரு குற்றச்சாட்டின் காரணமாக அவரை வெளியேற்றிவிட்டு வேறு ஒருவரை அமர்த்திக்கொண்டேன். இப்பொழுது அந்த ஏவலனே காவலராக வந்தது எனக்கு வியப்பாக இருந்தது. அவன் பெயர் சரியாக நினைவிலில்லை.

அவன் வந்தவுடன் ஆங்கில முறைப்படி ஒற்றைக்கை வணக்கத்தை மிடுக்காக எனக்குச் செலுத்தினான். நானும் வணங்கினேன். மிகுந்த வருத்தத்துடன் என்னை வட்ட அலுவலரிடம் அழைத்துச்சென்றான். செல்லுகையில் நடந்து செல்ல வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளை. ஆனால் என் விருப்பத்திற்கிணங்கக் குதிரை வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள அவன் இசைந்தான். என்னை, வருகின்ற வெள்ளிக்கிழமை வேலூருக்குக் கொண்டு செல்லுவார்கள் என்றும் முடிந்தால் தானும் குற்றவாளியைக் கொண்டு செல்லும் காவலர் இருவரில் ஒருவராக வரமுயல்வதாகவும் கூறினான். அங்குள்ள சிறைக்காவலர்களைத் தனக்குத் தெரியுமாதலால் அவர்களிடம் தான் என்னை நன்கு கவனித்துக்கொள்ளும்படி செய்வதாகக் கூறினான். அவன் அன்பை அறிந்து மகிழ்ந்தேன்.

இப்படித் தொடக்கத்திலேயே புதிய சூழ்நிலையில் எனக்குத் தெரிந்த ஒருவரை என் துணையாக வரச்செய்த இறைவனை மனத்திற்குள் வணங்கினேன்.

வட்ட அலுவலர் அலுவலகத்தில் ஒரு சிலர் என்னை அடையாளம் கண்டுகொண்டனர். பிறகு அங்கிருந்து கடலூர்க் கிளைச்சிறைக்கு அனுப்பப்பட்டேன். மாலை 6 மணிக்குள் சிறைக்குக் கொண்டு போய் ஒப்படைத்துவிடுவது தங்கள் பொறுப்பு என்றும், அப்பொழுது மணி 5.30 தானென்றும், வேண்டுமானால், இன்னும் அரைமணிப் பொழுது என் உறவினர்களுடன் உரையாடலாம் என்றும் காவலர் கூறினர்.

கிளைச்சிறைக்கு வெளியில் தென்மொழிக் குடும்பத்தினர் எல்லாரும் காத்துக்கொண்டிருந்தனர். அவர்களிடம் அரைமணி நேரம் மீண்டும் உரையாடினேன். காவலர் இருமருங்கும் நிற்ப நாங்கள் பேசிக் கொண்டிருப்பதை வழியில் போவார் வருவாரெல்லாரும் பார்த்துக் கொண்டே சென்றனர். எனக்கு அச்சூழ்நிலை புதியதானாலும், நான் எந்த வகையான அருவருப்பும் கொள்ளவில்லை. கமலாவிடம் இறுதியாக இப்பிரிவு தனிமைக்கும் துணிவிற்கும் ஒரு சூளுரை என்றேன். இக்கூற்று அவளுக்கும் எனக்கும் பொருத்தமாக இருந்தது.

இறுதியாக எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டு உள்ளே சென்றேன். எல்லாரும் கண்ணீர் வடித்தனர்.

உள்ளே இவர்களுக்கு மாறான சூழ்நிலை இருந்தது. அங்கு ஏழெட்டுச் சிறையறைகள் இருந்தன. அவை எல்லாவற்றிலிருந்தும் குற்றவாளிகள் புது விருந்து ஒன்று வருவதை ஆவலுடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். முறைப்படி என் வரவை ஒரு தலைமைக் காவலர் பதிவு செய்துகொண்டார். உடனே எனக்கு எந்த அறையை ஒதுக்குவது என்ற ஆய்வு நிகழ்ந்தது. அங்குள்ள அறைகள் ஒவ்வொன்றிலும் பத்து - பன்னிரண்டு பெயர்களாக மொத்தம் அறுபது - எழுபது குற்றவாளிகள் அங்கிருந்தனர். என்னை இரண்டாம் வகுப்பில் வைக்கச் சொல்லும் ஆணை அவர்கள் கைக்கு வராமற் போகவே என்னைக் கொஞ்சம் வேண்டா வெறுப்பாகவே நடத்தினர்.

நான் அவர்களிடம் பணிவாகவே நடந்து கொண்டேன். மிகவும் அன்பான குரலில் என்னை ஒரு தனியறையிலேயே வைக்கும்படி கேட்டுக் கொண்டேன். நான் ஒரு தாளாசிரியன் என்றும், எனக்குக் கொஞ்சம் அமைதி வேண்டும் என்றும், எழுதவும் படிக்கவும் தனியாக

இருந்தால்தான் ஏந்தாக இருக்குமென்றும் அவர்களிடம் விளக்கிக் கூறி வேண்டிக் கொண்டேன். சட்டப்படி அவர்களுக்கு இன்னும் ஆணை வரவில்லையென்றாலும் மாந்தத் தன்மைப்படி அவர்கள் என்னை நடத்துவதில் தவறில்லை என்று கூறினேன். அதன்பின் நான் எந்தச் சூழ்நிலையில் சிறைக்கு வந்தேன் என்று உசாவினர். நான் அவர்களுக்கு வழக்கின் முழு விளக்கத்தையும் சொன்னேன். அதன்பின் என்னைத் தனி அறையில் வைக்க முடிவுகட்டினர். ஆனால் அங்குள்ள காவலர்கள் ஏறத்தாழ ஒன்பது - பத்து பெயர்களாதலின், அவர்களுள் சிலர் என்னைத் தனியே வைக்க உடன்பட்டிலர். இறுதியில் என்னை நான்கு - ஐந்து பெயர்கள் உள்ள ஓர் இருட்டறையில் தள்ளிக் கதவை மூடினர்.

அவ்வறைக்குள் வெட்டுதற்கு நிறுத்தப்பட்டுள்ள ஆடுகள் போல் ஐந்து பெயர்கள் குறுகிக் கூனி மூலையில் அமர்ந்து கொண்டிருந்தனர். தாழ்வாரத்தில் காவலர்களின் தேவைக்காகப் போடப்பட்டிருந்த விளக்கொளி சிறைக் கதவின் கம்பியிடுக்குகளில் புகுந்து உள்ளே சிறிதளவு வெளிச்சத்தைக் கொடுத்தது. அவ்வொளி அங்குள்ள குற்றவாளிகளின் முகங்களைக் கண்டு கொள்ளப் போதுமானதாகக் கூட இருக்கவில்லை.

ஓர் ஐந்து நிமையங்களுக்குள் காவலர்களுக்குள் ஓர் ஒப்புதல் ஏற்பட்டது. உடனே கதவு மீண்டும் திறக்கப்பட்டது. உள்ளே ஒரு காவலர் வந்து அங்கிருந்த ஐவரையும் நோக்கி'டேய் எல்லாரும் வெளியே வாங்கடா' என்று அதட்டினார். வட்டரங்குக்காட்சியில் சாட்டையடி கேட்டுத் துள்ளியோடும் குதிரைகளைப் போல் எல்லாரும் ஒருவர் பின் ஒருவராக வெளியேறினர். அறை மீண்டும் பூட்டப்பட்டது.

நான் கையோடு கொண்டு வந்த சில பொருள்களை வெளியில் உள்ள நண்பர்களிடம் கொடுத்தனுப்பிவிட்டேன். என் கண்ணாடியையும் கழற்றி விடும்படி ஒரு காவலர் கூறினார். ஒருவர் என் பொருள் எதையும் உள்ளே வைத்துக் கொள்ளக்கூடாதென்று கூறினார். நூலையும் புத்தகங்களையும்கூடத் தந்து விடும்படி ஒருவர் கூறினார். மிகுதிப் பொருள்களை வைத்துக் கொள்ள ஒருவாறு இசைவு கிடைத்திருந்தது. அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு முடிவு எடுப்பதும், அதை விலக்குவது மாயிருப்பதைப் பார்க்கையில் காவலர்களே இந்நாட்டை ஆள்வதாகத் தோன்றியது. இதுபற்றி முன்பே தென்மொழியில் **'முட்டாள் அரசும் முரட்டுக் காவலும்'** என்று ஓர் ஆசிரியவுரை எழுதியிருந்தேன்.

அறைக்குள் சென்றதும் அறையைச் சுற்று முற்றும் பார்த்தேன். அறையின் வாயில் மேற்குப்புறம் அமைந்திருந்தது. அவர்கள் கணக்குப்படி அவ்வறை இருபது பெயர்களை அடைக்கப் போதுமானதாக இருந்தது. கிழக்குப்புற மூலைகள் இரண்டிலும் இரண்டு கழிவாய்கள் இருந்தன. இவை சிறுநீர் கழிக்கப் பயன்படுத்தப் பெற்றிருக்கவேண்டும். வடகிழக்குக் கழிவாய்க்கு அருகில் ஒரு பெரிய மண்பானை மேல் மூடியுடன் இருந்தது. இப் பானை மலம் கழிப்பதற்காக என்று அவர்கள் கூறினார்கள். அப்பொழுதுதான் அவ்வறை கழுநீரகம் போல் தீநாற்றம் நிரம்பியதாக இருப்பதை உணர்ந்தேன்.

நான் உள்ளே எடுத்துச் சொன்றிருந்த பொருள்கள் : ஒரு போர்வை, திருக்குறள் பரிமேலழகர் உரை, ஒரு கண்ணாடிக் குவளை, கண்ணாடிவைக்கும் கூடு, தூவல், பற்பொடி, பல்விளக்கும் தூரிகை, நாக்கு வழிக்கும் பட்டை, ஒரு துண்டு, தீப்பெட்டி, வெண்சுருட்டு, வெற்றிலை பாக்கு முதலியன. இவை எல்லாவற்றையும் அவர்களின் இசைவு பெற்றபின்பே கொண்டு வர முடிந்தது.

நான் உள்ளே சென்றபின் நாமதேவனும் பெருமாளும் உள்ளே வந்து தாங்கள் எல்லாரிடமும் நல்லபடியாக நடந்து கொள்ளச் சொல்லியிருப்பதாகக் கூறிச் சென்றனர். அவர்கள் விரைவில் சிற்றுண்டியும் வாங்கி அனுப்பியிருந்தனர். நான் அவர்களிடம் நாளைவரும் பொழுது ஒரு கற்றை வெள்ளைக் குறிப்பேடும் வாங்கி வரும்படி கூறியிருந்தேன். எல்லாரும் போனபின் அறையை மேல் துண்டால் தட்டிவிட்டுப் போர்வையை வாயிற்படி யருகில் விரித்துப் போட்டுவிட்டு அமர்ந்தேன். அமர்ந்ததும் என்னை யறியாமல் ஓர் இன்ப உணர்வு பிறந்தது. கண்களை மூடிக்கொண்டு இறைவனைச் சிறது நேரம் மனத்திற்குள்ளாகவே வணங்கினேன். அதற்குள் சிற்றுண்டியும் வரவே உண்டுவிட்டுப் படுக்கையில் படுத்தேன். எல்லாருடைய முகங்களும் ஒரு முறை மனத்திரையில் விழுந்து மறைந்தன. சிறிது நேரத்தில் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டேன்.

●

பாவலரேறு தமிழ்க்களம்

நம் ஐயாவின் 'பாவலரேறு தமிழ்க்களம்' அமைப்பு முயற்சிக்கென தமிழகமெங்கும் நன்கொடைத் திரட்டும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப் பெற்றுவருகிறது.

தங்களின் அருந்துணையை அளித்துவிட்டீர்களா?

– 'தமிழ்க்களம்' – அமைப்புக் குழுவினர்

'ஐக்கு' வின் தோற்றமும் வளர்ச்சியும்

சப்பானிய நாட்டில் உருவாகிய 'ஐக்கு' முறைப் பாடல்கள் இப்போது உலகம் முழுவதும் பரவி, பல நாட்டினராலும் மொழியினராலும் பின்பற்றப்பட்டு வருவதன் தலையாய சிறப்புக் காரணம் அதன் எளிமை வரிகள்தாம்; ஒரு கருத்து வெளிப்பாடு ஓரிருவரிகளில் அடங்குவதுதான். இந்த முறை எப்போது, எப்படியெல்லாம் சப்பானியப் புலவர்களாலும் அவையினராலும் பின்பு பொதுமக்களாலும் கடைப்பிடிக்கப்பட்டு, எப்படியெல்லாம் பெயர்பெற்று, இப்போது இப்படி 'ஐக்கு' என்ற பெயரில் உலகினரால் தம்தம் மொழியில் பின்பற்றப் பட்டு வருகிறது என்பதைப் பாடல்களின் வழியாகவே சென்று, வளர்ந்த வரலாற்றைப் புரட்டிக் கொண்டே சென்றால் கிபி. 680 - ஆம் ஆண்டிற்குப் போய் நாம் நின்று பார்க்க வேண்டிவரும்.

சப்பானிய இலக்கியப் பாடல் முறை ஏழாம் நூற்றாண்டில் (கிபி.680), **'உதா'** (uta) என்ற, பாடலைக் குறிக்கும் பொதுச் சொல், **'வாகா'** (waka) என்ற பெயரில் இலக்கணத்துடன் தொடங்கியது. இந்த வாகா என்ற பாடல் முறை, **'தாங்கா'** (tanka) என்ற ஒரு வகையிலும் **'சோகா'** (choka) என்ற ஒரு வகையிலும் வளர்ந்தது. தாங்கா என்ற இலக்கண வகை, 5 வரிகளைக் கொண்டு மொத்தம் 31 எழுத்திசைகளில் அடங்கப் பெற்ற வகை. நம் 'குறள்' வகை வரிகள் 4,3 என்று அடங்கிய இரண்டு வரிப் பாடல் வகை என்று சொல்லும் போது, இந்த 43 என்ற எண்கள் சீர்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன அல்லவா? ஆனால், சப்பானிய 'தாங்கா' என்ற 5 வரிப் பாடல் வகை 5, 7, 5, 7, 7 என்ற எண்ணிக்கையில் ஒவ்வொரு வரியின் எழுத்திசைகளைச் சுட்டிக் காட்டுகிறது. அதாவது நம் இலக்கணமுறையில் விளங்கும் இலக்கியப் பாடல்கள் சீரின் ஒழுங்குகருதி நேர், நிரை என்று எழுத்தெழுத்தாகப் பிரித்துக் கணக்கிடுவது போன்று, இந்தச் சப்பானிய 'தாங்கா' என்ற 5 வரிப் பாடல் வகையில் முதல் வரியில் ஐந்து எழுத்திசைகள் மட்டும் பெற்று விளங்கும். எடுத்துக்காட்டாக, கிபி 759 ஆண்டின் 'மான்யோசு' (Manyoshu) என்ற சப்பானிய மேனிலை மக்கள் எழுதிய பாடல்களின் தொகுப்பிலிருந்து ஒரு பாடலைப் பார்ப்போம்.

மோ னோ மி நா வா (5)
அ த ரா ஷிக் கி யோ ஷி (7)
த தா ஷிக் கு மோ (5)

சித்திர செந்தாழை

ஹி தோ வா ஃபுரி நிஷி (7)
யோ ஷி கரு பெஷி இ (7)

(Traditional Japanese Poetry An Anthology; பக்கம் 58; பாடல் 74)

தமிழில் : பொருள்கள் அனைத்தும்
புதியதாக ஆகச் சிறப்பு
இதனுள் ஒரு கருத்து விலக்கு
மாந்தன் பழமை யெய்தெய்த
சிறப்பு மேல்புறுமே.

மேற்கண்ட சப்பானியப் பாடலில் இங்ஙனமாக 5 வரிகளும் 5, 7,5,7,7 என்ற எண்ணிக்கையில் எழுத்திசைகளைப் பெற்று, மொத்தம் 31 எழுத்திசைகளை மட்டும் பெற்று, தாங்கா என்ற பெயரில் வழங்கி வந்திருக்கின்றது. இதில் 5, 7, 5 எழுத்திசைகளைக் கொண்ட முதல் மூன்று வரிப்பாடல் பகுதியை **'மேற்பகுதிப் பாடல்'** என்றும், மற்றும் 7, 7 எழுத்திசைகளைக் கொண்ட கடையிறுதி இரண்டு வரிப்பாடல் பகுதியைக் **'கீழ்ப்பகுதிப் பாடல்'** என்றும் வழங்கினார்கள்.

'சோகா' என்ற பாடல்வகை ஒருகுறைந்த அளவு இலக்கண வரை யறையுடன் நீண்ட பாடல்வகையைக் குறிப்பது. 'சோ' (Cho) என்றால் 'நீண்ட' என்றும் 'கா' என்றால் பாடல் என்றும் பொருள் கொடுக்கும். இந்தச் 'சோகா' வகைப்பாடல்கள் எவ்வளவு வரிகளாகவும் நீண்டு விளங்கலாம். ஆனால் இதில் ஒரு வரையறை: முதலிரண்டு வரிகள் 5, 7 எழுத்திசைகளில் எழுதப்பெற்று, கடையிரண்டு வரிகள் 7,7 என்ற எழுத்திசைகளுடன் முடியப் பெறுதல் வேண்டும். இந்தச் 'சோகா' பாடல் வகை அவைப்புலவர்களால் நிறைய எழுதப் பெற்று வந்தன. பொதுக்கருத்துகள் மட்டுமன்றிச் சிறுசிறு நிகழ்ச்சிகள், கதைகள், உணர்வு வெளிப்பாடுகள் சூழ்நிலை விளக்கங்கள் இங்ஙனம் பாடல் நீள்வதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். என்றாலும் 'சோகா' விற்கு மிக முந்திய காலத்தில்கூடப் பெரிய கதைத் தொகுப்புப் பாடல்களுக்கு இடையிடையே **சிறுசிறு பாடல்கள்,** கதை மாந்தர்களால் பாடப்படுவதுபோல் எந்த இலக்கண வரையறையும் இன்றி, 5 ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் பேச்சு இலக்கியமாய் (Oral Literature) வழங்குப் பெற்று வந்தனவற்றில் காணப்படுகின்றன. என்றாலும் 'ஐக்கு' வளர்ந்த வரலாற்றில், இந்தப் பாடல் தோற்றம் இலக்கண வரையறையே இன்றி இருப்பதனால் கணக்கில் எடுத்துக் கொள்ளவியலாது; செய்தியாக மட்டும் தெரிவிக்க முடியும்.

இதுவரையிலும்,'உதா' என்ற, பாடலின் பொதுச்சொல் இலக்கணமுறைப்படும்போது 'வாகா' என்று வழங்கி பின்பு அதில்

'சோகா' என்ற குறை இலக்கண முறைப் பாடல்வகை பற்றியும், 'தாங்கா' என்ற நிறை இலக்கண முறைப் பாடல்வகை பற்றியும் பார்த்தோம். மேற்கண்ட இரண்டு வகையில் 'சோகா', என்ற குறை இலக்கண முறைப் பாடல்வகை ஏன் நீண்ட பாடல்களாகப் புலவர்களால் வரையறையின்றிப் பாடப் பெற்றது என்பதற்கு சில காரணங்களை, அதுபோன்ற பாடல்களின் தோற்றத்தைக் கண்டு கணக்கிடலாம். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இருந்த புகழ்பெற்ற அவைப்புலவர்கள் சில இயற்கை அழகுப் பொருள்களை விளக்கமாக வரையழகுப் படுத்தும் நிலையிலும், காலத்தின் போக்கின் அழகையும், இயற்கையழகையும் வெவ்வேறு வகையில் கண்ட நிலையிலும் நீண்ட 'சோகா' வாக அமைந்ததுபோல் தோற்றத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இந்த வகையான நீண்ட 'சோகா' பாடல்கள், 7ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'மான்யோசு' (Manyoshu) என்ற நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல் தொகுப்பில் இடம் பெற்றது என்றாலும், அக்காலத்திய மக்கள் பொருட்சுவையில் மகிழ்ந்து பாராட்டினர் என்றாலும், அதற்குப் பின் வழிவழியாய் வந்த புலவர்களால் அந்தக் குறையிலக்கண முறையான 'சோகா' பாடல்கள் பின்பற்றப்படவில்லை.

வழிவழியாய் வந்த அவைப் புலவர்கள், காலத்திற்குத் தகுந்தாற்போலும், அறிவு வளர்ச்சி முன்னேற்பாடான கருத்துகள் அடங்கியும் பாடலின் பொதுக் கருத்துகள் வகைவகையாகவும் மாற்றங்களையும் திருப்பங்களையும் பெற்றிருந்தாலும் சப்பானிய நிறை இலக்கணமுறையான 'தாங்கா'என்ற 5, 7, 5, 7, 7 எழுத்திசைக் கணக்கு முறை மாறாது அவ்விலக்கணமுறையை நிலைப் படுத்துவதில் மிகுகவனம் செலுத்தி வந்தனர்.

இதற்கிடையில் இதே இலக்கண முறையைப் பின்பற்றிப் பலவகையான பாடல் அழகு முறைகள் இப்பாடலுக்குள் பொதியப் பெற்றன. 'தலையணை மொழி' என்ற பொருளில், **'மக்குரா கொத்தோபா'** (Pillow word) என்ற சொல்லழகும், 'மாற்று மொழி'என்ற பொருளில் **'கக்கே கொத்தோபா'** (Pivot word) என்ற முறையழகும் 'தாங்கா' வில் வளர்ந்தன. 'கொத்தோபா' என்பது மொழி அல்லது சொல் என்று தமிழில் பொருள்படும். முதலில் சொல்லப் பெற்ற 'மக்குரா கொத்தோபா' என்பது நம் தமிழில் 'அடைமொழி' என்ற இலக்கணமுறையிலும், இரண்டாவதாக சொல்லப்பெற்ற 'இலக்கண முறையிலும் பொருந்திப் பொருள் கொடுப்பதாகும்.

இந்தக் காலத்தில்தான் 'புத்த மதம்' வெகுவாக, ஆழமாகச் சப்பானியரால் சீனர்கள்வழிப் பின்பற்றப்பெற்று வந்தது. எனவே

ஏராளமான அவைப்புலவர்களும் புத்தமதக் கருத்துகளையும், வேறுவகையான இயற்கையழகுடன் இணைந்த, விளையாட்டு முறையான கருத்துகளையும் 'கக்கே கொத்தோபா' முறையில் அதாவது இரட்டுறமொழிதல் முறையில் போட்டியுடன் பாடி விளையாடி மகிழ்ந்திருந்தனர். இந்த முறை நம் பழங்கால 'இணைப்புலவர்களை' வெகுவாக நினைவுப்படுத்தும்.

அதாவது, சப்பானியத் 'தாங்கா' இலக்கணப் பாடல் வகையில், முதல் 5, 7, 5 என்ற எழுத்திசைகளைக் கொண்ட மேல் மூன்று வரிகளை (மேற் பகுதிப்பாடல்) ஒரு புலவர் இரட்டுறமொழிதல் முறையில் பாட, மற்ற 7, 7 என்ற எழுத்திசைகளைக் கொண்ட கடையிரண்டு வரிகளை (கீழ்ப்பகுதிப்பாடல்) மற்றொருபுலவர், முன்புலவரைத் தொடர்ந்து பாடலை முடித்தல் அக்காலத்திய சப்பானியரால் பெரிதும் பாராட்டி வரவேற்கப்பெற்றது. இந்த வகையான இரண்டு புலவர்கள் இணைந்து மேல்,கீழ் பகுதிகளை இணைத்துத் 'தாங்கா' தாங்கி வருவகையில் 'ரெங்கா' (Renga) என்ற பெயரில் 'தாங்கா' சிறப்பிடம் பெற்றது. அதாவது இணைச்செய்யுள் (Linked Verse) என்று தமிழில் சொல்லலாம். சப்பானியத்தில் 'ரென்' என்பது இணைப்பு, தொடர்பு என்றும் 'கா' என்பது 'பா' என்றும் பொருள்படும்.

இதற்குப்பின் இப்படியாகவே சப்பானியப் பாடல்கள் இலக்கணமுறை மாறாது, வகைவகையான சுவை பொருந்திச் செழிப்பாக வளர்ந்து கொண்டே வந்தன - சப்பானியர்களால் இயற்றப்பெற்று வந்தன. இலக்கணமுறையும் வரிகளும் எளிமை யாகவும் சுருக்கமாகவும் இருந்ததின் காரணமாகப் பொதுமக்களும், மிகஎளிய நாட்டுப்புற மக்களும்கூடப் பேச்சுவழியாகவும் எழுத்து வழியாகவும் மிகவும் எளிதான முறையில் பாடல்களை இயற்றினர். இவற்றில் எழுத்தில் வராது போன பேச்சுவழிப் பாடல்கள் ஏராளம் என்றும் சொல்லப்படுகிறது.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் புதிய இளந்தலை முறையினர் அந்த வரிகளை மேலும் சுருக்கப்படுத்தி, 'மேற்பகுதிப்பாடல்' கீழ்ப்பகுதிப்பாடல்' இவற்றையும் மனத்தில் கொண்டு, முதல் மூன்று வரிப்பாடல்களில் தனித்தனிப் பாடல்களை இயற்றத் தொடங்கனர். என்றாலும் தொன்று தொட்ட இலக்கண முறையான 5, 7, 5, 7, 7 எழுத்திசைகளுடன் கூடிய வரிகளின் எண்ணிக்கை முறையை ஒருமுகமாகக் காத்துவந்தமை சிறப்பாகக் கருதத் தக்கது. முதல் மூன்று வரி அல்லது கடைசி இரண்டுவரிப் பாடல்களை உருவாக்கியவர்களில் தலைசிறந்து, பிற்காலத்தில், புகழுக்குரிய வராகவும் விளங்கியவர்

'மட்சுவோ பாசோ' (Matsuo Basho) என்பவர். இப்படியாக மூன்று வரி, இரண்டு வரிப்பாடல்களை ஒரே புலவரோ, இரு புலவர்களோ இயற்றி, 'கக்கே கொத்தோபோ' முறையின்றி அதாவது 'இரட்டுற மொழிதல்' முறையின்றி 5 வரிகளாக முழுமைப்படுத்தும் பாடல் முறை **'ஐக்காய் ரெங்கு'** (haikai renku) என்ற பெயரில் வழங்கப்பெற்றது. இதனை ஆங்கிலத்தில் 'Orthodox linked verse' என்று மேற்கத்தியர் வழங்குகின்றனர்.

இந்த மரபுவழியின் ஒழுங்குமுறை சிதறலைத் தொடர்ந்து, அதாவது சப்பானிய யாப்பிலக்கண மரபு வழித் தொடர்ந்து பாடல்கள் பகுதிபகுதியாக இயற்றப்பெற்று வந்ததைத் தொடர்ந்து, இக்காலத்தில் வாழ்ந்த அந்தத் தலைசிறந்த புலவராகிய 'மட்சுவோ பாசோ' என்பவராலேயே சப்பானிய நெடுங்கால யாப்பிலக்கண மரபு முறையில் அடக்கம் பெற்றிருந்த மொத்தம் 31 எழுத்திசைகளின் எண்ணிக்கை (5+7+5+7+7) மிகுந்தும் குறைந்தும் மாற்றப்பெற்று, சப்பானிய நிறை இலக்கண முறையான 'தாங்கா' என்ற 5 வரி பாடல்கள், வரிகளில் மாற்றம் தராவிடினும் எழுத்திசை வரிசையிலும் எண்ணிக்கையிலும் பிறழ்ந்து 'பாசோ' வால் இயற்றப் பெற்று வந்தன.

அக்காலத்தில் 'பாசோ' மிகவும் பா எழுதுவதில் வல்லவர் என்பதனால், மற்ற புலவர்களும் வேத்தவை ('எம்பிரர்' அவை)யும், பொதுமக்களும் உடனடியாக அதிர்ச்சியடையவில்லை. இங்ஙனம் நீண்ட காலமாக நிலைப்படுத்திக் காப்பாற்றிப் போற்றப்பெற்று வந்த, வழிவழிப் புலவர்களால் கையாளப்பெற்ற இலக்கணம், முறை பிறழ்ந்து கணக்குத் தவறுவதைக் கண்டு, புலவர் உலகம் ஒரு புறமாக அதிர்ச்சியடைந்து, அதுபற்றி ஆழ எண்ணிக் கொண்டிருந்தது என்றாலும், அவர் பாடல் வரிகளில் சொரிந்த அழகினையும், செறிந்த சொல்வளத்தினையும், பொருள் வலிமையையும் கண்டு அமைந்திருந்தது மட்டுமின்றி, 'பாசோ' வைப் புலவர்கள் வெகுவாகப் போற்றினர். அவரின் இயற்கையான நோக்கும், அருமையான கருத்துகளும், இலக்கணமுறையையும் மீறும் அளவில் மடைதிறந்து விட்டன என்று சொல்லலாம். அவரால் இலக்கணமுறைக்குக் கட்டுப்பட்டு தம் கருத்து வல்லமையில் உள்தோன்றும் சொற்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இது போன்ற காரணங்களால் இலக்கணமுறையை மீறிய 'பாசோ' வின் துணிவைப் புலவர்கள் உலகம் பாராட்டாமலும் இல்லை. இவரின் பெரும்பாலான பாடல்கள் 5,7,5,8,9 என்றும், 6,9,5,6,8 என்றெல்லாம் இலக்கணமுறை பிறழ்ந்து இயற்றப்பெற்றன. இந்தச் சறுக்கல் இலக்கண மரபுவழி வரலாற்றில் சுற்றுபுறச் செய்தியாகவே இப்படிக் காரணத்துடன் தரப் பெற்றுள்ளது. எனவே முன்பு

கூறபெற்ற 'ஐக்காய் ரெங்கு' என்ற பாடல் வகையைத் தொடர்ந்து, முதன் மூன்று வரிகளில் மட்டும் ஒரு பாடலை முழுமைப்படுத்தி இயற்றி வரும் வகைப் பாடல்களை **'ஒக்கு'** என்று பெயர் வழங்கினர். இந்த ஒக்குப் பாடல்கள் மூன்று வரிகளில் 5,7,5 எழுத்திசைகளின் எண்ணிக்கையுடன் இலக்கண முறைப்படி சப்பானியர்களால் மிகவும் எளிதாக ஏராளமான எணிணிக்கைகளில் எழுதப்பெற்று வந்தன.

இங்ஙனம் பெரும்பாலான அளவில் சப்பானிய மூன்று வரி பாடல்முறை 'ஒக்கு' என்ற பெயரிலேயே வழங்கி வந்தமையைத் தொடர்ந்து, 17 ஆம் நூற்றாண்டில், 'ஒக்கு' பாடலுடன் சிறிய அளவு உரை விளக்கமும் உடன் இணைக்கப்பெற்றது. மூன்று வரிகளில் ஆழமாக விளக்க முடியா நிலையில் 17 ஆம் நூற்றாண்டு சப்பானியப் புலவர்கள், பொருளை முழுமைப்படுத்த வேண்டியோ, விளக்கம் நிறைவு பெற வேண்டியோ இந்த வகையான உரை விளக்க வரிகளை செய்யுளுக்கு முன் தலைப்பைத் தொடர்ந்தோ, தனியாகவோ இணைத்திருக்கலாம். இந்த உரைவிளக்க இணைப்பிற்கு 'ஐபுன்' (Haibun) என்று சப்பானியத்தில் பெயர் வழங்கப்படுகிறது. புன்' என்பது 'உரைவரி' என்று பொருள்படும். இப்படியாக 'ஒக்கு' பாடல்கள் 'ஐபுன்' என்ற ஓரிரு 'உரைவரி'களுடன் இணைந்து வருவது அளவளாவிய வழக்கமாக ஆகி, **'ஒபுன் ஐக்கு'** என்று பெயர் வழங்கியிருக்கலாம். இதற்கிடையில் 17-ஆம் நூற்றாண்டில், வெவ்வேறு வகையான இந்த "ஒக்கு" 'ஐக்காய் ரெங்கு' 'ஒபுன் ஐக்கு' வகைகள், சப்பானியரால் பலபொருள்படும்படி, பலசூழல்களில் இயற்றும் பாடல்கள் 'சப்பாய்' என்றும், நகைச்சுவையான பாடல்கள்'கியோகா' என்றும் பெயர் பெற்றன.

17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூன்றுவரி (5,7,5=17) 'ஒக்கு' பாடல்களும், மற்றும் மீண்டும் பழைய முறையான 5 வரி (5,7,5,7,7=31) 'தாங்கா'ப் பாடல்களும் வழக்கத்திற்கு வந்தன.

இதனைத் தொடர்ந்து 18,19 ஆம் நூற்றாண்டுகளில் இலக்கண முறையில் இயற்றப்பெற்ற 5,7,5 'ஒக்கு' பாடல் வகை, 'ஐபுன்' உரைஇணைப்புடன் இயற்றப்பட்டாலும் இணைப்பில்லாது இயற்றப்பட்டிருந்தாலும் 'ஐக்கு' (haiku) என்ற பெயரில் தொடர்ந்து வழங்கப் பெற்றன. இதே காலத்தில் தான் 'ஓசானோ அகிக்கோ' (Yosano Akiko) என்ற பெண்பாற்புலவர், தொன்று தொட்ட சப்பானிய இலக்கணமுறையை அதாவது 'தாங்கா'ப் பாடல் முறையை மீண்டும் தம் பாடல்களில் கொணர்ந்து பழமையைத் துணிவுடன் படைத்தார். இதுமட்டுமன்றி, இதே இலக்கண முறையில் ஆழமான, வெளிப்படையான வாழ்க்கைக் கருத்துகளைப் பட்டறிவினால்

அறிந்து பாடலில் புகுத்திப் புலவர் உலகில் சாய்காலைத் தேடிக் கொண்டார்.

என்றாலும் மற்ற எளிய பாடலாசிரியர்களாலும், வளர்ந்து வரும் புலவர்களாலும் காலத்தின் போக்கு மாற்றங்களாலும் 'தாங்கா' முறைப் பாடல்கள் தவிர்க்கப்பட்டது மட்டுமன்றி, இரண்டுவரி மூன்றுவரிப் பாடல்கள்கூட இலக்கணமுறையோடும், இலக்கண முறை தவிர்த்தும் 'ஐக்கு' என்ற பெயரிலேயே எழுதப்பெற்று வந்தன. அதாவது வரையறையற்ற எண்ணிக்கையில் எழுத்திசைகள் அந்த இரண்டுவரி மூன்றுவரிகளை நிறைத்தன. இந்தப் புதிய 'ஐக்கு' பாடல் முறை, அதாவது இந்த வரைமுறையில்லாக் குறுகிய எளிய பாடல் முறை சப்பானிய இளைய தலைமுறையினராலும், மற்றும் மேற்கத்திய, தெற்கத்திய நாடுகளிலும் கைநீட்டி வரவேற்கப்பெற்று, இப்போது உலக நாடுகளெல்லாம் தம்தம் மொழிகளில் தம்தம் சொந்தப் பொருட்கருத்துகளை 'ஐக்கு' முறையில் அதாவது சப்பானியப் புதிய 'ஐக்கு' முறையில் இந்த 20,21-ஆம் நூற்றாண்டுகளில் இயற்றி வளர்த்து வருகின்றன. ●

சிங்காநல்லூர்த் திருவள்ளுவர் பேரவை முதல் மாநாடு

கோவை சிங்காநல்லூர்த் திருவள்ளுவர் பேரவை முதல் மாநாடு கடந்த மீனம் 18 ஞாயிறு (31.3.96) அன்ற வரதராசபுரம் கண்ணபிரான் திருமண மண்டபத்தில் முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது.

காலை 10 மணியளவில் புலவர் நெறிமுடியாரின் பாவேந்தர் பாடல் இசையுடன் தொடங்கிய இம் மாநாட்டில் தமிழின நலம் பேணிய அறிஞர்களின் படங்கள் திறந்து வைக்கப்பட்டன. ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் படத்தைத் திரு.தமிழ்மாணிக்கம் திறந்து வைத்தார்.

முன்னதாகத் திருவள்ளுவர், மறைமலையடிகளார், திரு.வி.க, பெரியார், பாவேந்தர், பாவாணர், சிங்காரவேலர், வ.உ.சி, முத்துலெட்சுமி அம்மையார், நாகம்மையார், இரட்டை மலை சீனிவாசன், சிவா, ஆகியோர் படங்கள் அறிஞர்கள் பலரால் திறந்து வைக்கப்பட்டன.

திரு. இரா. அதியமான் தலைமையில் தமிழர் பண்பாட்டு ஆய்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

மாலை 4 மணிக்குத் திருக்குறள் இரா. கைகசுப்பு ரத்தினம் அவர்களின் பதினாறு கவனக நிகழ்ச்சியும், 5-30 மணிக்குத் தென்றமிழ் மறை யடிகளிரும்பொறை தலைமையில் வள்ளுவச் சிந்தனைக் கருத்தரங்கமும் நடைபெற்றன.

அனைத்து நிகழ்ச்சிகளிலும் தலைசிறந்த அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டனர். நல்ல பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திரு. இரணியன் நன்றி நவின்றார்.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

இனவியலும் இயங்கியலும்

கரடிப்பட்டி க. கண்ணன்

மொழிவழியான தேசிய இனக்கருத்தாக்கமும், அதன் விடுதலைக்கான போராட்டங்களும் உலகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலக்கட்டத்தில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டை உயர்த்திப் பிடித்த ஆரியப் பார்ப்பனரைப் போலவே திராவிடத் தேசியத்தை உயர்த்திப் பிடித்த தலைவர்களும் ஒருவகையில் மொழித் தேசிய இன மக்களுக்கு எதிரானவர்களே. ஆயினும் இந்தியத் தேசியத்திற்கும் திராவிடத் தேசியத்திற்குமான ஆளுமைத் தன்மை ஒப்பீட்டளவில் வேறுபாடுடையதேயாகும். மேலும் திராவிடத் தேசியக் கருத்தாக்கத்தைத் தமிழகத்திலேயேதான் திணித்தார்களே தவிர மற்ற மலையாள நாட்டிலோ, கன்னட நாட்டிலே, தெலுங்கு நாட்டிலோ பரப்பவில்லை. அம்மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்களும் திராவிடக் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள வில்லை என்பதற்கு வளர்ந்து வருகின்ற தமிழ்த் தேசிய உணர்வே சான்றாகும்.

இந்திய ஆரியப் பார்ப்பனிய ஆளுமையை எதிர்த்து ஒவ்வொரு மொழிவழித் தேசிய இனமும் இன்று தங்களின் உரிமைக்காகப் போராடத் தொடங்கி விட்டனர். அவ்வாறே இந்தியத் தேசியத்தை முதன் முதலில் எதிர்த்த திராவிடத் தேசிய சிந்தனையாளர்களையும் எதிர்த்து, தமிழ்த்தேசிய இன உணர்வு வளர்ந்து கொண்டுள்ளது. அண்மைக்காலத்தில் தமிழ்த் தேசிய இன உருவாக்கத்திற்கான கருத்து வெளிப்பாடுகளைப் பல்வேறு அமைப்புகளும் இயக்கங்களும் முன்னெடுத்து வருகின்றன. இந்திய ஆரியப் பார்ப்பனிய முதலாளிய அரசு, வெவ்வேறு தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை அங்கங்குள்ள குழுமக அரசியல் சூழலுக்கேற்பத் திசைதிருப்பியும் ஒடுக்கியும் வருவதைப்போல், தமிழ்த்தேசிய இன விடுதலைப் போராட்டத்தைத் திராவிடக் கருத்தியலையும் சாதியத்தையும் மதத்தையும் பயன்படுத்தித் திசை திருப்ப முயலுகிறது. ஆகவே, இந்திய அரசின் சூழ்ச்சியான ஒடுக்கு முறையின் தன்மைகளை விளங்கிக் கொண்டு அதற்கு எதிர்நிலையான செயற்பாட்டில் நாம் இறங்க வேண்டும்.

ஆரியருக்கும் வெவ்வேறு தேசிய இனங்களிலிருந்து வந்த பார்ப்பனருக்கும் முரண்பாடு இருந்தாலும், மற்ற தேசிய இனங்களின் மக்களை ஒடுக்குவதில் இரு குழுவும் இணைந்தே இயங்குகின்றன.

ஒரு தேசிய இனத்தை இன்னொரு தேசிய இனத்திற்கு எதிராகப் பயன்படுத்துவது; தங்களுக்குக் கீழ்நிலையிலுள்ள மேல் சாதியருக்கு எதிராகப் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பயன்படுத்துவது; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக மேல்சாதி மற்றும் பிற்படுத்தப் பட்ட மக்களைப் பயன்படுத்துவது. இவர்கள் எல்லோரையும் இந்து மதம் என்கிற ஓர் அமைப்புக்குள் அணைத்துக்கொண்டு மற்ற சிறுபான்மை மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற இசுலாமிய, கிறித்தவ, சீக்கிய, புத்தமத மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவது. ஆக, நேரடியாக உறவு கொள்கின்ற பக்கத்தில் இருக்கின்ற மற்றொரு தேசிய இன மக்கள்தாம் தங்களுக்கு எதிரி என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிற்படுத்தப்பட்ட மக்கள்தாம் எதிரி என்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மேல்சாதியார்தாம் எதிரி என்றும் பொது எதிரி யார் என்று தெரிய முடியாத அளவில் சாதிய அமைப்பையும், பொருளியல் சுரண்டலையும் இந்து மதக் கட்டமைப்போடும், வல்லரசுகளின் துணையோடும் இந்திய அரசு கட்டிக்காக்கிறது.

உலகியலில் மக்கள் அமைப்பு ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலக்காட்டகங்களுக்குப் பின் ஆளும் வகுப்பு - ஆளப்படும் வகுப்பு, ஒடுக்கும்வகுப்பு - ஒடுக்கப்படும் வகுப்பு எனறு இரு பிரிவுகளாக ஒவ்வொரு நிலையிலும் இயங்கி இறுதியில் ஒவ்வொரு நாட்டிலும் உலக அளவிலும் ஒன்றோடொன்று போராடிக்கொண்டிருக்கின்றன. இயற்கையில் இயங்கும் அனைத்தும் ஒன்றோடொன்று சார்ந்தும் முரண்பட்டும் இயங்குவதைப் போல் குமுகாயமும் சில நிலைகளில் சார்ந்தும் சில நிலைகளில் முரண்பட்டும் இயங்குகின்றது. இந்தச் சார்பு நிலைகளையும் முரண்பாட்டு நிலைகளையும் ஆளும் பிரிவு எவ்வாறு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்துகிறதோ, அவ்வாறே ஆளப்படும் பிரிவும் தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்தவேண்டும். பயன்படுத்தவும் முடியும். சோவியத்து ஒன்றியத்திலும், சீனாவிலும் உலகந்தழுவிய பாட்டாளிய மக்களுக்கான மார்க்சிய இயங்கியலின் துணை கொண்டு நிலவுடைமை மற்றும் முதலாளிய அரசுகளை வீழ்த்தி உழைக்கும் மக்களுக்கான அரசுகளை இலெனினும், மாசே துங்கும் அமைத்தார்கள். மேலும் இவ்வரசுகள் முழுமையான பொதுவுடைமை அரசை நோக்கியும் உலகளவிலும் பரவாமல் போனதற்கான கரணியத்தை நாம் நுட்பமாக ஆய்வு செய்யவேண்டும். மாந்த வாழ்வும், வாழ்வியலோடு உறவு கொண்டுள்ள தங்களின் தாய்மொழியும் பண்பாடும் கலையும் நாகரிகமும் நிலமும் ஒன்றோடொன்று பிண்ணிப் பிணைந்தே இருக்கும். இந்த

அடித்தளத்தில் நின்றுதான் அவன் உலகந் தழுவிய பார்வையைப் பார்க்கமுடியும்.

"உண்மையில் தன்னை ஓர் ஆற்றலாக நிலைநிறுத்திக்கொள்ள விரும்பும் எந்த இயக்கமும் பழைய மரபுகளை உடைக்காமல் புதிய நிலைமைக்கென்ற உத்திகளைப் பின்பற்றாமல் வெற்றிபெற முடியாது. முகமது நபி அவர்கள் அதைத்தான் செய்தார்." என்று அசுகர் அலி என்சினியர், இசுலாமின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

பல்வேறு இனக்குழுக்களையும் குலக்குழுக்களையும் கொண்ட மெக்கா நகரத்தில் வணிகக் குழுவுக்கான ஒரே இறைவன் என்ற கோட்பாட்டை முகமது நபி அவர்கள் உருவாக்கிப் பல உருவ வணக்க முறையை உடைத்தெறிந்தார். ஆனால் குமுக ஒடுக்கு முறையும் பொருளியல் சுரண்டலும் வெளிப்படையாகத் தெரியாமல் இருப்பதற்கு இசுலாம் மதம் பயன்பட்டதைப்போலவே இங்கும் சாதிய ஒடுக்கு முறையையும் பொருளியல் சுரண்டலையும் மறைப்பதற்கு இந்து மதம் பயன்படுகிறது. ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலையை விரும்புகின்ற நாம் பழைய மரபு வழியான சாதிய எதிர்ப்பு அல்லது சலுகைப் போராட்டங்களையும் போலிப் பொதுவுடைமையரின் பாராளுமன்றப் பாதைகளையும் தூக்கி எறிந்துவிட்டுப் புதிய உத்தியைக் கையாளவேண்டும்.

ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வான - படிநிலைத் தன்மை கொண்ட - பல்வேறு மொழித் தேசியப் பண்பாடுகளையும், மதவியல் கோட்பாடுகளையும் கொண்ட ஒரு சிக்கலான குமுக அமைப்பைக் கட்டிக்காப்பதே இந்திய அரசாகும். தேசிய இனக்கொள்கை யாளராலோ, பாட்டாளியச் சிந்தனையாளர்களாலோ சாதியத்தாலும் மதத்தாலும் ஒடுக்கப்பட்ட அடித்தள மக்களை எழுச்சி கொள்ள வைக்க முடியவில்லை. ஆக ஆரியப் பார்ப்பனிய முதலாளியரின் இருப்புக்கும், அவர்களை வீழ்த்தி ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களின் எழுச்சிக்கும் விடுதலைக்குமான உத்தியை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

ஆரியப் பார்ப்பனிய மொழியான சமற்கிருதத்தையும் பண்பாட்டையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் இந்தியாவிலுள்ள பழங்குடி மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களுமே ஆவர். மற்ற பார்ப்பனரல்லா மேல்சாதிய, பிற்படுத்தப்பட்ட மக்களிடம் பார்ப்பனிய மயப்படுத்தப் பட்ட தன்மை சில அளவீடுகளில் இருப்பதால், அவர்களின் தலைமை யிலான தேசிய இன விடுதலைப் போராட்டங்களோ, பாட்டாளியப் போராட்டமோ, இங்கு ஒரு முழுமையான மக்கள் எழுச்சியை உருவாக்கிவிட முடியாது.

இந்தியாவில் ஒவ்வொரு மொழித் தேசிய இன மக்களும், பார்ப்பனியப் பண்பாட்டுக்கும் வல்லரசியப் பண்பாட்டுக்கும் ஆட்படுத்தப்பட்டுள்ளனர். வெவ்வேறு தேசிய இனங்களின் பாட்டாளி மக்களும் வெவ்வேறு காரணங்களுக்காகச் செயற்கையாக உறவு கொள்ள வைக்கப்பட்டுள்ளனர். பல தேசிய இனங்களின் நிலப்பகுதியும் இயற்கை வளங்களும் பக்கத்துத் தேசிய இன எல்லையோடு வேண்டுமென்றே இணைக்கப்பட்டு தொடர்ந்த மோதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இந்திய அளவிலும் வேறு மொழித் தேசிய நாட்டிலும் வாழும் மதவழிச் சிறுபான்மையினருக்கும், மொழிவழிச் சிறுபான்மையினருக்கும் குமுக வழியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இந்தியத் தேசியமே பாதுகாப்பானது என்று ஒரு திட்மிட்ட கருத்துப் பரப்பப்படுகிறது. ஆக இத்தனை சிக்கல்களுக்கும் சரியான தீர்வோடுதான் நாம் அடுத்த கட்ட நகர்வைத் தொடங்கவேண்டும்.

தேசியத் தன்னுரிமையை ஏற்றுக்கொண்டு சில இயக்கங்களும், தமிழ்த்தேசிய விடுதலையைப் பாட்டாளியரின் தலைமையில் வென்றெடுக்கவேண்டும் என்ற குறிக்கோளில் சில இயக்கங்களும், ஒடுக்கப்பட்ட மக்கள் எழுச்சியிலும் தலைமையிலும்தான் தமிழ்த் தேசிய விடுதலையை வெல்ல முடியும் என்ற கருத்தும் வளரத் தொடங்கியுள்ளன. இவை ஒவ்வொன்றுக்குமுள்ள குமுக மற்றும் வகுப்புச் சார்புத் தன்மையையும் இயங்கியல் உறவையும் வளர்த்துக்கொண்டால் நடைமுறையில் ஏற்படும் பட்டறிவோடு சரியான கோட்பாடு உருவாகும். அதுவரை பண்டைய இயக்கப் போக்குகளையும் இன்றைய இயக்கங்களின் செயல்பாடுகளையும் நடுநிலையோடும் குடிநாயக உணர்வோடும் திறனாய்வுக்குட்படுத்த வேண்டும். காலத்தில் மாறுதல் சில புதிய கருத்துகளையும், வழிகாட்டல்களையும் உருவாக்கும். எந்நிலையிலும் குமுகச் சார்பையோ வகுப்புச் சார்பையோ முழுமையாகத் தனிப்படுத்திப் பார்க்காமல், தன்னோடு உடன்படுகின்ற அல்லது முரண்படுகின்ற வகுப்புகளோடு கால இடச் சூழலுக்கேற்ப நாம் உடன்பட்டும் முரண்பாட்டும் இயங்கவேண்டிய தேவை ஏற்படும்.

இயற்கையிலுள்ள அனைத்தும் இயங்கிக்கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கும்என்பதுதான் மார்க்கசிய அறிவியல் காட்டும்வழியாகும். சாதிய உணர்வையும் மதவுணர்வையும் என்றும் அழியாத வெவ்வேறு வடிவங்களில் இயங்கிக்கொண்டுள்ள பேராற்றல் என்னும் இறைமையோடு பொருத்தி இயங்காவியல் கருத்துகளை நிலவுடைமை மற்றும் முதலாளியச் சார்புள்ள மதவியல் சிந்தனையாளர்கள் மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்கின்றனர். இம்

மதவியல் கருத்துகளில் மயங்கி ஒடுக்கப்பட்ட மக்களும். உழைக்கும் மக்களும் தங்கள் சாதியையும் வகுப்பையும் மொழியையும் பண்பாட்டையும் தாழ்வாகக் கருதிக்கொண்டு ஒரு தேக்க நிலையிலேயே இருக்கின்றனர். இத்தன்மை ஆரியப் பார்ப்பனிய முதலாளியருக்குச் சார்பான ஓர் எதிர்விளைவையும் தோற்றுவிக்கிறது.

இந்தியாவில் பல்வேறு மொழித் தேசிய இனங்களின் ஒடுக்கப்பட்டமக்கள் ஒற்றுமையின்றி வெவ்வேறு இனங்களின் ஆளுமைக்கு ஆட்பட்டதற்கும், தொடர்ந்து சாதியக் கட்டமைப்பு உடையாமல் இருப்பதற்கும், இரண்டாயிரம் ஆண்டுக்கால செக்குமாட்டு வாழ்க்கைக்கும் ஆரியப் பார்ப்பனரின் திட்டமிட்ட சூழ்ச்சி மட்டும் காரணமன்று. அதை மாற்றுவதற்கான சரியான வழியை ஒடுக்கப்பட்டமக்கள் பின்பற்றாததும் ஒரு காரணமாகும். உலக அளவில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஆளுமையருக்கும் எவ்வாறு தொடர்பிருக்கிறதோ அவ்வாறே குமுக அளவில் ஒடுக்க்ப்பட்டும் பொருளியல் நிலையில்சுரண்டப்பட்ட மக்களுக்கான மார்க்சிய இயங்கியல் மெய்யியலை அந்தந்த நாட்டுச் சூழலுக்கேற்பப் பயன்படுத்தி இறுதியில் ஒன்றாக இணைத்து, உலகளவில் வல்லரசிய முதலாளியத்தை வீழ்த்தவேண்டும்.

ஆரியம் மக்களைப் பிரித்து வெறுக்கும் தன்மை கொண்டது. தமிழியம் மக்களை ஒருவரோடொருவர்இணைத்து நேசிக்கும் தன்மை கொண்டது. தமிழியம் உழைக்கும் மக்களின் பொதுவுடைமைப் பண்பாட்டை வளர்க்கும். ஆரியம் உழைக்காமல் சுரண்டும் தனியுடைமைப் பண்பாட்டை வளர்க்கும். தேசிய இன விடுதலைக் கருத்துக்கு வலுவூட்டிய பாவலரேறு அவர்களின் சிந்தனைகளையும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் எழுச்சிக்கான இயங்கியல் கோட்பாட்டை உருவாக்கிய மார்க்கசிய வழிகாட்டல்களையும் இணைத்து அடுத்த கட்டப் போராட்டத்திற்கு அணி சேர்ப்போம்!

●

வெங்காலூர் நா. தென்னவன் மறைவு

தென்மொழியின் நெடுநாள் அன்பரும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரும் உ.த.க. - வின் கருநாடக மாநில மேனாள் அமைப்பாளருமான நா. தென்னவன் அவர்கள் கடந்த மேழம் 25 அன்று (7-5-96) இயற்கையெய்தியமை யறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரது பிரிவால் வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்

நூல் அறிமுகம்

நூல்	:	**சிறகை விரித்த சிந்தனைகள்**
ஆசிரியர்	:	**முனைவர் கடவூர் மணிமாறன்**
வெளியீடு	:	விடியல் வெளியீட்டகம் 109, மேலைத் தெரு. கிருட்டிணராயபுரம் - 639102
விலை	:	உரு. 18.00, பக்கங்கள் 96

பாவலரேறு அவர்களின் சீரிய நினைவுகளுக்குக் கொடையெனக் குறித்த இந்நூல், 43 மரபுப்பாக்கள் அடங்கிய பாநூல். ஆற்றொழுக்கான பாத்திறம் வாய்த்த இவர்தம் நடையில் இவரின் சிந்தனைகள் சிறகுகளின் பல வண்ணங்கள். தமிழில் தொடங்கி இயற்கைப்பாடம் என மாந்தனின் பொது இயல்பு முதல் பண்பாடு, மாந்த மறுமலர்ச்சி, தமிழனின் பண்புகள்வழி பல்வேறு கருத்துகளைக் கொண்ட தொகுப்புப் பாடல்களை உள்ளடக்கியது.

இற்றைத் தமிழன் என்ற பாடலில் தமிழனின் இன்றுள்ள பண்பை வருந்திக் கூறுவர்.

தவறுகள் இழைக்கத் தவியாய்த் தவிக்கும்
அவலம் மிக்கவன் அருங்குணத் தமிழன்!
விதைக்கும் ஆர்வம் உடையனாய்
இழுக்கைச் சுமப்பதில் ஏறுகழுதையாய்
இருக்கும் தமிழன் எதைச் சாதிப்பான்!
உருப்படும் வழிகள் ஒன்றும் தேரான்!
சொரணை இல்லான் சோற்றுத் துருத்தி!
முரண்பாடுகளின் மொத்தத் தொகுப்பு!

இவரின் நடைக்கும், உணர்வுக்கும் இ'து எடுத்துக்காட்டு.

தமிழறிஞர்களுக்காகச் சில பாடல்களை இணைத்துள்ளார். திருவள்ளுவர், அண்ணாத்துரை, பாரதியார், பாரதிதாசன், குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விசுவநாதம், பாவலரேறு ஆகியோரைப் பற்றிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பாவலரேறு அவர்களைப் பற்றிய பாடல் 'நெருப்பாற்றில் எதிர் நீச்சல்' என்ற பாவலரேறு நூல்களில் ஒன்றான நூலின் தலைப்பிலேயே இடம் பெற்றுள்ளது.

பல்வேறு சிந்தனைகளைப் பாடல் தொகுப்பாகக் கொண்ட இந்நூல் நல்ல உணர்வை நாடுவோர் பயின்றுவக்க வேண்டிய நூல்.

நூல்	:	**தமிழகமும் ஈழத் தமிழகமும்**
ஆசிரியர்	:	**ஈழவேந்தன்**
வெளியீடு	:	ஈழநாடு பதிப்பகம். கனடா
கிடைக்குமிடம்	:	மா.க. ஈழவேந்தன் 6, 2ஆவது முதன்மை வீதி. செகநாதநகர், அரும்பாக்கம், சென்னை - 600106
விலை	:	தமிழக விலை உரு 10.00 பக்கங்கள் 8 + 25

தமிழர் உரிமை உணர்வைத் தம் நெஞ்சில் பலகாலம் தேக்கி உலகில் எங்கேனும் தமிழனுக்கு உரிமை கிடைக்காதா என்று அவாவில் தோய்ந்து அலையும் மனம் கொண்ட திரு ஈழவேந்தன் அவர்களின், தமிழகத்தையும் ஈழத்தையும் ஒப்பு நோக்கும் ஆய்வு நூல்.

எளிய மாந்தரும் விளங்கிக் கொள்ளும்மாறு மொழியின வகையில் உள்ள சிக்கல்களை எடுத்தியம்பியுள்ளார்.

தங்கள் அரசியல் ஊதியத்திற்காக ஈழத்தமிழர்சிக்கலைத் தேவைப் படுமளவிற்கு மட்டும் எடுத்துக்கூறிவிட்டு முழுச் செய்தியையும் மறைத்துவிடும் போக்கிலும் அல்லது தங்களுக்குத் தாக்கம் வரும் நேரத்தில் முழுவதும் கை நெகிழ்த்துவிடும் போக்கிலும் இயங்கும் இப்போதைய அரசியல்காரர்கள்வழிச் சரியான செய்திகள் மக்களுக்கு எட்டாத நிலையில், தமிழகத்தின் சிக்கலை ஒப்பு நோக்கி ஈழத்தமிழர்சிக்கலைக் காட்டுவதன்வழிச் சரியாகப் புரிந்து கொள்ள வழி வகுக்கிறது இந்நூல்.

தமிழகத்தில் இந்தியால் வரும்கேடு போலவே ஈழத்தில் சிங்களமும் கேடு செய்து வருவதை அவர் எடுத்துக்காட்டுவதை இங்குக் காணலாம்.

"இந்தித் திணிப்பின் விளைவாகத் தொழில் வாய்ப்பினையும் தமிழக மக்கள் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். இந்தி தெரியாதவர்களுக்கு நடுவன் அரசில் வேலை இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. தமிழக அரசுக்கு வருகின்ற சுற்றறிக்கை நிருபங்கள்கூட இந்தியில் அமைந்து தமிழக அரசைத் திணறடிக்கிறது.

இலங்கையிலும் சிங்களம் மட்டும் சட்டத்தின் விளைவாகச் சிங்கள மொழி எம்மீது திணிக்கப்பட்டதோடு நூற்றுக்கு ஐம்பது, அறுபது விழுக்காடு அரசுப் பணியில் ஈடுபட்டிருந்த தமிழரின் தொழில் வாய்ப்பும் பறிக்கப்பட்டது. இதன் விளைவு அரசுப் பணியில் இனிமேல் தமிழன் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. மொழித் திணிப்பைப் பொறுத்த வரையில் தமிழக மக்களுக்கும், தமிழ் ஈழ மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நிலை ஏறக்குறைய ஒன்றேயாகும். தமிழகத்தின் ஆட்சிமொழி தமிழ் என்று கூறப்படினும் மக்களின் அன்றாடத் தேவைகளுக்குத் தமிழைப் பயன்படுத்துகின்ற வாய்ப்பே இல்லை...."

இவ்வாறு மொழியால், பொருளியலால், பண்பாட்டால் ஏற்படும் வல்லாளுமை இந்நூலில் விளக்கப்பெறுகிறது. ஈழத்தமிழர் சிக்கலை நடுநிலையான மாந்தநேய உணர்வுடன்கூடப் பார்க்க இயலாத நிலை தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அந்நிலைமாற இந்நூல் அரிய செய்திகளை எளிமையாகக் கூறும் நற்சிறுநூல். மேலும் தமிழகத்தின் தமிழர் நிலைகூட இந்நூலில் ஈழத்தவரின் பார்வையில் விளக்கப் பட்டுள்ளது.

நூல்	:	**வள்ளுவத்தின் வீழ்ச்சி**
ஆசிரியர்	:	**குணா**
விலை	:	*உருபா 120.00*
வெளியீடு	:	*தமிழக ஆய்வரண்* 3155/A எச்.ஏ.எல். இரண்டாம் கட்டம் *வெங்காலூர் 560008*
கிடைக்குமிடம்	:	*பஃறுளி பதிப்பகம்* *183, வேங்கடரங்கம் தெரு* *சென்னை - 600005*

தமிழரின் அக்கால வானியல்- கணிய அறிவுபற்றிய வரலாற்றை ஆய்கிற நூலாகும் இது. ஆரியம் எவ்வாறு ஒவ்வொன்றையும் கையகப்படுத்திக்கொண்டு மூலத்தை அழிக்கும் இயல்புப் பண்பை அமைத்து வந்ததோ அதே போல் இவ்வறிவையும் கையகப்படுத்தி இருக்கு வேதமாக இருத்திக் கொண்டது என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இவ்வளவில் எந்த ஆய்வாளரும் (கணிய ஆய்வாளர்கள்கூட) செய்யாத ஒன்றை இத்துறையில் இந்நூலாசிரியர் பெரும்பரப்பில்

செய்திருப்பது தமிழினத்திற்குத் தேவையான முதன்மையானவற்றில் ஒன்றாகும்.

இந்நூலை எழுத நோக்கமாக நூலாசிரியர் கூறும் பாடம் ஒன்று நாம் கொள்ளத்தக்கது

"ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின், அவ்வினத்தின் வரலாற்றை முதலில் அழிக்க வேண்டும். அவ்வினத்தை மீட்க அதன் வரலாற்றை முதலில் மீட்க வேண்டும் வந்தேறி ஆளவந்தாரிடமிருந்து நாம் படித்த பாடம் இது."

இதுவரை தாம் எழுதிய நூல்களில் மிகப் பெரும் நிறைவைத் தந்ததாக கூறப்படும் இந்நூல் எழுதிய போது உணர்ந்ததாக அவரே கூறுவதாகக் கேளுங்கள்.

'எம் தமிழ் மூதாதையரே அணுக்கொள்கையையும் கணியத்தையும் வானியலையும் உலகுக்கு தந்தவர் என்னும் உண்மை, பெரிய பெருமையாகவும் வலிய ஊட்டமாகவும் இருந்து எண்ணங்களை ஆற்றுப்படுத்தியது. இன்று அடிமைகளாய் மிடிமையில் உழன்று வரும் எம்மூத்த தமிழ்க் குடியின் இழி நிலையே எம்மினத்தின் தாழ்வு மனப்பான்மைக்குக் காரணமாகி, தாய் மொழியாம் தமிழைப் பேசுவதும் கற்பதுமே தாழ்வென நம்பிக் கெட்டுவரும் இன்றைய சூழலில், அம்மூத்த குடியில் பிறந்ததன் பயனை இந்நூலை எழுதுகையிலேயே என்னால் உணரமுடிந்தது."

இந்நூல் தமிழினத்திற்குப் போர்க்கருவியாக அமையவேண்டும் என்பது ஆசிரியரின் அவா.

இந்நூல் அழகிய தோற்றமும் உயர்ந்த பதிப்பும் கொண்டது. இதை தமிழர் அனைவரும் படித்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

— **மா.பூ.**

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்

(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/–
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/–

வெற்றியும் - தோல்வியும்

நடைபெற்ற தேர்தல் நேரத்தை நல்ல வாய்ப்பாக யார் பயன் படுத்தினார்களோ பயன்படுத்தவில்லையோ, அண்டை ஈழத்தமிழகத்தின் மேல் படைவலுவைச் சரியாக ஏவி விட்டிருக்கிறார் சந்திரிகா அம்மையார். இப்போது உலக நாடுகளின் கவனமும் கண்காணிப்பும் வேறுபக்க இருக்கும் நிலையில் அப்பாவி மக்கள் மீதும் போராளிகள் மீதும் ஒரே மூச்சாக விரைவு விரைவாக படையெடுப்பு செய்துள்ள நிலை நமக்கு வருத்தம் தருகிற நிலையாக உள்ளது.

ஈழத்தமிழ் மக்கள் தமிழகத் தமிழர்களின் ஆதரவை எதிர்பார்க்கிறார்களோ இல்லையோ, உலகமொத்தமும் வாழும் தமிழினத்தினத்திற்கு இங்குள்ள தமிழகத் தலைவரின் குரல் ஒன்று தேவையாக உள்ளது. அத்தலைவர் இங்கு அரசியல் வழி அதிகாரம் பெற்றிருந்தால் தான் நல்லது என்று கருதுகிற நிலை நிலவுகிறது.

கலைஞரை இத்தேர்தல் வழி மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இது கலைஞருக்குக் கிடைத்த வெற்றி என்பதை விட செயலலிதாவின் அரசுக்குக் கிடைத்தத் தோல்வி என்பதே மிகப் பொருந்தும். செயலலிதாவையும் தேர்ந்தெடுத்தது இந்த மக்கள்தாம். அவரிடமிருந்து சிலவற்றை எதிர் பார்த்தனர் இம்மக்கள்.

கலைஞரிடமும் சிலவற்றை எதிர்பார்த்துத்தான் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆனால் செயலலிதாவிடம் எதிர் பார்த்தவற்றிலும் வேறுபட்டவை அவை. அவை எவை என்பதைப் புரிந்து கொண்டு ஆட்சியாற்றுவதே அவருக்கு வெற்றியைத்தர இயலும். இல்லெனில் அவரின் தோல்வி வேறு யாருக்காவது வெற்றியாகும்படியாகி விடும்.

இத் தேர்தல் காலம் முன்பு எப்போதும் இல்லாதவாறு புதிய கூறுகளைக் கொண்டவை. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமானால், நேரடியாக மக்களே, தாம் தேர்ந்தெடுத்தத் தலைவர்களைச் சட்டையைப் பிடித்து 'நீ என்ன கிழித்தாய்' எனக் கேட்குமளவிற்கு விழிப்புணர்வு பெற்றிருப்பதும்;

சாதியைப் பிடித்து ஓட்டு வாங்கலாம் என்று எண்ணிச் சாதி அமைப்புகளைச் சார்ந்து அவற்றின் கிளைகளை ஒன்றிணைத்த சோமசுந்தரர்களும், கோபாலசாமிகளும், அனந்தர்களும் சாதிவழியும் செல்லாக்காசு ஆனதும்;

இந்து மதம் ஒன்றைச் சார்பாக்கிக் கொண்டு பழங்கதைப் புரட்டுகளைச் செய்து பார்த்த பாரத சனதாக்கட்சி தமிழகத்தில் எடுபடாமல் போனதும் ஆகும்.

இத் தமிழின வளர்ச்சியை மனத்தில் கொண்டாவது இப்போது பதவியேறுபவர்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வார்களா?

– குன்று

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சிகள்

திருப்பத்தூரில் *20-8-95 ஞாயிறு மாலை 3 மணி அளவில் காமராசர் திருமணக் கூடத்தில் விடுதலைப் போராளி பாவலரேறு அய்யாவுக்கு வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது. சோலைப் பிரியன் வவுனியன், நி.சவிவேகானந்தன், சி. பொன்னுரங்கம், நா. சிவா, சுப. வீரபாண்டியன், அப்துல்காதர், பி.வி.அனந்தகிருட்டிணன், பழ.நெடுமாறன், முதலியோர் வீரவணக்க உரை ஆற்றினர்.*

சென்னை – மூலக்கடையில் *பாவலரேறு ஐயாவுக்குச் சென்ற 2995 காரி மாலை 6 மணியளவில் த.ஓ.வி.இ. சார்பில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது. திரு. குணவழகன் தலைமையில் சொல்லாய்வறிஞர் அருளியார், வழக்கறிஞர் பா. வேணுகோபால், மாறன், தமிழோசை, உலக முதல்வன், கயல் ஆகியோர் வீரவணக்க உரையாற்றினர்.*

கோவை – ஈச்சனாரியில் *30-9-95 காரி மாலை 6 மணி அளவில் தமிழ்த் தேசிய விடுதலை போராளி பாவலரேறு நினைவேந்தல் பொதுக் கூட்டமும். பாவலரேறு படத்திறப்பு நிகழ்ச்சியும் தநாமா. இலெக.; பு.இ.மு. சார்பிலும் சிறப்புற நடத்தப்பெற்றது. தோழர் ஆறுச்சாமி தலைமையில் தோழர்கள் தமிழ்நாடன், அ. வள்ளுவராசன், தமிழ்த்திரு. சின்னவேலு ஆகியோர் பங்கேற்றுச் சிறப்புரை செய்தனர்.*

சோமனூர் – பள்ளிப்பாளையத்தில் *2-10-95 திங்கள் மாலை 6 மணி அளவில் தநாமா. இலெ; பு.இ.மு. (திருப்பூர்) சார்பில் பாவலரேறு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. திரு. க.வே. கதிரவன் தலைமையில் திருவாளர்கள் தமிழ்நாடன், அ.வள்ளுவராசன், மருது. இரா.தமிழ்மணி, ஏகலைவன், வேலுச்சாமி. திருச்செல்வி, உ. லூர்துசாமி, கண்ணையன், நாகராசன் ஆகியோர் உரையாற்றினர்.*

திருவண்ணாமலையில் *பாவலரேறு ஐயா அவர்களின் நினைவு போற்றும் நிகழ்ச்சியினைச் சென்ற 24-09-95 ஞாயிறு முற்பகல் 2.00 மணி அளவில் த.நா.மா.இலெ., பு.இ.மு.., அமைப்பினர் நடத்தினர். திருவாளர்கள் மா.செ.தமிழ்மணி, சி. வெற்றிவேந்தன், மார்க்சு வசந்து, சீனு தமிழ்மணி, ஆகியோர் பங்கேற்று வீரவணக்கவுரை நிகழ்த்தினர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் தமிழ்த் தேசிய விடுதலைக்கு உயிர் மூச்சென வாழ்ந்த விடுதலைப் பாவலர் ஐயா பெருஞ்சித்திரனார் படைப்புகளைத் தமிழக அரசுப் பாடத்திட்டத்தில் இணைத்துத் தமிழக மக்களிடையே விழிப்புணர்வு ஊட்ட அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதும் ஒன்றாகும்.*

கோலார் தங்கவயல் – இராபர்சன் பேட்டையில் 8-10-95 ஞாயிறு காலை 10.30 மணி அளவில் உலகத் தமிழ்க் கழகச் சார்பில் பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பாட்டரங்கு நிகழ்ச்சிக்குப் பாவலர் தமிழேந்தி தலைமை ஏற்க, பாவலர்கள் க. அரசு, ஆ. இராவணன், மருது, கசி. தென்னவன், இரா. தங்கவரசன் , புலவர் காத்தியாயினி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பாடினர். நினைவேந்தல் நிகழ்ச்சியில் த. குமணன் தலைமையில், சொல்லாய்வறிஞர் ப. அருளி, எரியீட்டி, அன்பு, அறிஞர் குணா, அந்தோணி, பேரா.கு. பூங்காவனம், முனைவர் ந. அரணமுறுவல், இலூர். புகழேந்தி ஆகியோர் நினைவுரை ஆற்றினர்.

குரும்பாளையம் – மதுக்கரையில் 29-9-95 அன்று வெள்ளி மாலை 6 மணி அளவில் த.நா.ம. இலெ., பு.இ.மு. சார்பில் விடுதலைப் போராளி பாவலரேறு ஐயாவின் நினைவேந்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பாவலரேறு ஐயா அவர்களின் திருக்குறள் மெய்ப் பொருளுரை

நம் அரும்பெறல் ஐயா பாவலரேறு அவர்கள் தம் வாழ்நாள் பின்பகுதியின் பெருமுயற்சியாய் எடுத்துக் கொண்டு எழுதிய **திருக்குறள்– மெய்ப் பொருளுரை** (ஐயா அவர்கள் எழுதி முடித்துள்ள வரையில்) வரும் 10-3-97 அன்று வெளியிடப் பெறுகிற வகையில் அணியமாகிக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் பக்கங்களுக்கும் மேலான அந்நூல் வெளியீட்டின் பெருமுயற்சி, அன்பர்களின் துணையை எண்ணியே மேற்கொள்ளப் பெறுகிறது.

– ஆசிரியர், 'தென்மொழி'

- பாவலரேறு ஐயா அவர்களின் அரிய படைப்பிலக்கியம்.
- செறிவுறு பாக்களொடு விரிவுறு விளக்கங்களையும் உடன் கொண்டது.
- செம்மையான பதிப்பு

நூறாசிரியம்

விலை : உரு : 100.00

பதிவஞ்சலில் பெறவிரும்புவோர்

உரு 115 (நூற்றுப்பதினைந்து மட்டும்) விடுக்க.

தொடர்புக்கு :

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்

5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தோழர் சோளியப்பன் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றார். பாவலரேறு படத்தினைத் தமிழ்த்திரு ஆ. குமாரசாமி அவர்கள் திறந்து வைத்தார். தோழர்கள் உரையாற்ற நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

நெல்லிக்குப்பத்தில் 15-10-95 ஞாயிறு மாலை 4.00 மணிஅளவில் பாவலரேறு ஐயாவின் நினைவு போற்றும் பொதுக்கூட்டம் தநா.மா இ.லெக. சார்பில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திரு. இரா. கல்விச் செல்வன் தலைமை ஏற்றார். திருவாளர்கள் ஆரோ. செந்தமிழன், சீனு, தமிழ்மணி, சி. வெற்றி வேலாயுதன் முதலியோர் உரையாற்றினர். இறுதியாக வழக்கறிஞர் இராமதாசு அவர்கள் சிறப்புரையாற்றி விழாவினை நிறைவு செய்தார்.

போரூரில் 15-10-95 ஞாயிறு அன்று மாலை 4 மணி அளவில் பாவேந்தர் தமிழ்மன்றம் பு.இ.மு. அமைப்புகள் சேர்ந்து பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்த் தேசிய ஈ.கி. சங்கரலிங்கனார் ஆகியோர் நினைவு போற்றும் கருத்தரங்கம் பாவரங்கம் நடத்தின.

பொன்னேரி – சின்னகாவணத்தில் 5-12-95 செவ்வாய் மாலை 4.00 மணி அளவில் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் தாய்தமிழ்ப் பள்ளி' யினைத் தாய்தமிழ்க்கல்வி இயக்கத்தைச் சார்ந்த திரு. பாரதிதாசன் அவர்கள் தொடங்கி நடத்தி வருகிறார். அதன் தொடக்க நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

தமிழீழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து 30-9-95 மாலை 7 மணி அளவில் திண்டுக்கல்லில் பு.இ.மு. அமைப்பினர் கண்டனக் கூட்டம் நடத்தினர். நிகழ்ச்சியில் புலவர். கலியபெருமாள் அவர்கள் பாவலரேறு ஐயாவின் உருவப்படத்தினைத் திறந்துவைத்துச் சிறப்புரையாற்றினார்.

வி.சி.பி. உலகத் தமிழ்ச்சங்கம் சார்பில் அக்டோபர் 13.14.15 -1995 ஆகிய நாட்களில் மூன்றாவது மாநாடு நடைபெற்றது. அதில், தமிழ்ச்சான்றோர் திருவுருவப்படத்திறப்பு நிகழ்ச்சியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் திருவுருவப் படத்தைப் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத் தலைவர் பாவலர் வா.மு. சேதுராமன் அவர்கள் திறந்து வைத்தார்.

நெல்லிக்குப்பத்தில் ஒடுக்கப்பட்டோர் உரிமை எழுச்சி மாநாடு 29-12-95 வெள்ளிக் காலை 9 மணி அளவில் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அரங்கில் நடைபெற்றது. மாநாட்டைத் தொடங்கி வைத்து அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் உரையாற்றினார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் திருவுருவப் படத்தினைப் பெரியவர் எசு.எ.எம். தண்டபாணி திறந்து வைத்தார். குமுக முன்னேற்றச் சிந்தனையுடைய பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்டன.

* பாவலரேறு ஐயா அவர்களின், தனிச்சிறப்பு நிலைகள் 'தென்மொழி' வரலாற்றின் தனிச்சிறப்பு நிலைகள் பற்றிய விளக்கம் கட்டுரைகள்,

* ஐயா அவர்களின் கைவண்ணம் மிளிரும் கருத்தார்ந்த ஓவிய வரைவுகள், அவர்தம் பொது வாழ்வுச் சிறப்பினைக் காட்டும் பொலிவுமிகு ஒளிப்படங்கள்.

* அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள், பாவலர்கள், கலை வல்லுநர்கள் முதலானோர் ஐயா அவர்களைப் பற்றி வழங்கும் கட்டுரைகள், பாடல்கள்,

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
நினைவுமலர்
வெளியீட்டுவிழா

காலம் : தி.பி. 2027 ஆடவை 2 ஞாயிறு (16.6.96)

இடம் : சென்னை

தமிழ் அறிஞர் பெருமக்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்தோர் பங்கேற்கின்றனர்.

விடுதலை விரும்பி, பேராசிரியர் தீரன், செஞ்சி இராமச்சந்திரன், பேரா. கோ. தங்கவேலனார், முனைவர் பொற்கோ, முனைவர் தாயம்மாள்அறவாணன், முனைவர் ஆறு. அழகப்பன், முனைவர் இரா. மதிவாணன், முனைவர் சக்குபாய் நெடுஞ்செழியன், முனைவர் நபிச்சமுத்து, பாவலர் அப்துல் ரகுமான், பாவலர் ஈரோடு தமிழன்பன், பாவலர் தெசிணி, பாவலர் தஞ்சைவாணன், திருவாளர்கள் கு.வெ.கி.ஆசான், இரா. முத்துக்குமாரசாமி, குணா, பேரா. சச்சிதானந்தம், பெ. மணியரசன், தியாகு, பொ. வெ. பக்தவச்சலம், திருவாரூர் தங்கராசு, கோவை கு. இராமக்கிருட்டிணன், சுந்தரராசன், செங்கம் சபார், திரைப்பட இயக்குநர் சேகர், இராசுகிரண் மற்றும் நடிகர் தமிழாகரன் (மன்சூரலிகான்) முதலானோர் அழைக்கப் பெற்றுள்ளனர்.